THE COUNTRY HERALD

கிராம தூதன்

ஒரு கிராம முன்னேற்ற தேசிய மாதப் பத்திரிகை

"வீடுதோறும் கல்வியெனும் விளக்கேற்றி வைப்போம்;
வாடுகின்ற மன்னுயிரின் வறுமையினைத் தீர்ப்போம்".

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, கௌரவ பத்திராதிபர், சீவில்லிபுத்தூர்.

மலர்: ௩ | **1941, நவம்பர்—விசு, கார்த்திகை** | இதழ்: ௰௧

1 கடவுள் வணக்கம்: பிரார்த்தனை

இரக்கமோடு பொறை ஈதல் அறிவா சாரம்
இல்லேன் நான் நல்லோர்கள் ஈட்டங் கண்டால்
கரக்குமியல் புடையேன்பாழ் நெஞ்சம் எந்தாய்,
கருந்தாதோ வல்லுருக்கோ கரிய கல்லோ!

தாயுமானவர்

எந்தாய்! நான் இரக்கம் (ஒடு) பொறை ஈதல் அறிவு ஆசாரம் இல்லேன்; நல்லோர்கள் ஈட்டம் கண்டால், கரக்கும் இயல்பு உடையேன்; என்-பாழ் நெஞ்சம், கரும்தாதோ, வல் உருக்கோ, கரிய கல்லோ, என்னென்றிசைப்பது?

பாப்பாப் பாட்டு

பாரதியார் பாடலிலே பாப்பா—தேச
பக்தி பெருகுவது போல
சீரணி கிராமதூதன் இதிலும்—மேழிச்
செல்வம் பெருகுதடி பாப்பா!

பத்திரிகை பாராமலே யார்தான்—உயர்
பதவி அடைந்தவர்கள் பேசு?
மெத்தனமிதிலுனக்கு வேண்டாம்—ஒரு
வீசம் உணர்ந்திடடி பாப்பா!

மாதங்கள்தோறும் இது வந்து—சுக
வாழ்வு உழவுமுறை சொல்லும்
ஆதலினாலிதனை ஏற்று—நாம்
அவசியம் பார்ப்பமடி பாப்பா!

ஊணுடைகள் உண்டுடுக்க இலையேல்—நம்
உடல், உயிர், உலகமுந் தான் ஏது?
பேணுமவை பெருகுமுறை கூறும்—இதன்
பேரில் சந்தா சேர்வமடி பாப்பா!

ஓர் கிராமவாசி

2. பொன்னுரைகள் : பொறுக்கு மணிகள்

1. வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்ரு வொழுக்க மொருவன்க—ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொருஞயின்
தூற்ருதே தூர விடல்,

நாலடியார்

இருவர் வேற்றுமை இன்றிக் கலந்து நட்டக்கால் (உறவாடிஞல்) தேற்ரு ஒழுக்கம் ஒருவன் கண் உண்டாயின், ஆற்றும் துணையும் பொறுக்க; பொருன் ஆயின் தூற்ருதே தூர விடல்.

2. நாம் என்றைக்கும் பழமைக்கே கட்டுப்பட்டிருக்கவும் முடியாது. இப்போதிருக்கிற படிக்கே இருந்து விடவும் முடியாது. இந்தக் கடவுள் உலகத்தில் நிலை நீச்சில் நிற்பதென்பதில்லை. நாம் பழமையில் நம் கருத்தை மரியாதையுடன் செலுத்தியும் தற்காலத்தோடுறவாடியும் பிற்காலத்திற்காகக் கவலை கொண்டும் நாம் அவசியம் இருக்குமிடம் விட்டுப் பெயர்ந்திடவும் வேண்டும். நாமிப்படிப் பெயர்ந்து போகும்பொழுதே, பல பக்கங்களிலு மிருந்தும் வருவனவற்றைக் கொண்டு, நம் ஒழுக்கத்தையும் நாகரிகத்தையும் கலைகளையும் உயிர்ப்பித்தும் பலப்படுத்தியும் அவற்றையெல்லாம் நம் தேசிய வாழ்க்கைப் பாவில் ஒன்றுபடநெய்திடவும் வேண்டும். இந்தச் சேர்க்கையும் கூட்டுறவும்—பிரிந்து நிற்றல் அல்ல; நம் சனங்களின் அபிவிருத்தியில் தீவிரமாக வளர்ந்தும் வரவேண்டும். வேறெந்தப் போக்கும் நம் தேசிய வாழ்க்கையையே உலைத்துவிடும்; நம் அக்கறைக்கும் பெரும் பாதகம் விளைவித்திடும். இதுவே, நான் அவசரமாக அல்ல, பொறுமையில்லாததல்ல—நான் நம் தேசத்திற்கு என் ஆயுளெல்லாம் உழைத்த உழைப்பின் பயனுக வெகு தீர்க்கமாக ஆலோசித்து என் நாட்டாருக்கு விடுக்கும் செய்தியாகும்.

(A Nation in the Making)

Surendra Nath Banerjee

3. தமிழ் என்ன செய்தது? தமிழ் நாட்டைக் கண்டது. தமிழ் நாடு திருவள்ளுவரைத் தந்தது. திருவள்ளுவர், தன்னைத் தந்த தமிழ் நாட்டைக் கண்டார்; அதற்குக் காரணமான தமிழ் மொழியை உணர்ந்தார். தன் கடமையை உணர்ந்து தமிழில் நூல் செய்தார்; தமிழும் புகழ் கொண்டது; தமிழ் நாடும் வான் அளாவிய புகழ் கொண்டது. அதனை நன்குணர்ந்த பாரதியார்,

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று பொன்னெழுத்தால் பொறித்துள்ளார்.

தமிழ் மக்களே,

உங்கள் கடமையையும் சிறிது உணருங்கள். அத்தகைய வான் அளாவிய புகழ் கொண்ட திருக்குறளில் உள்ள அறம், பொருள், இன்பம் இவற்றை ஓதுங்கள்—உணருங்கள். நீங்களும் உங்கள் கடமையை யாற்றிப் பிறவிப்பயனை யடைய வேண்டாமா?

தென்காசி முத்துக்குமாரசாமிப் பிள்ளை

3. தலையங்கம்:

பிறரை நம் வயப்படுத்துவதும் நம் நண்பராக்குவது மெப்படி?

How to win friends and influence People? By Dale Carnegie*

(சாரம்) I

1. பிறரைக் குறைகூறாதே

நாம் நம்முடைய சுகத்தையே முதலாவதாகக் கவனிக்கவேண்டும். அதற்கடுத்தபடியாக, நாம் கவனிக்கவேண்டிய முக்கிய காரியங்கள், பிறரை யறிவதும் அவர்களோடு பழகுவதும் அவர்களை நம் போக்கிற்குத் திருப்பி நம் பேரில் பிரியமாயிருக்கச் செய்வதுமாகும்.

பிறரைக் குறை கூறுவதால் நாம் ஒரு பயனும் அடைவதில்லை. எவருக்கும் தான் செய்ததுதான் சரியென்று தோன்றும். நாம் குறை சொல்லச் சொல்ல அஃது அவரை அதுவே சரியெனக் காட்டுவதற்கான ஆதாரங்களைத் தேடவும் அவ்வாறே நினைக்கவும் பேசவும் தூண்டும். ஆகவே, நம்முடைய கூற்று அவருடைய வருத்தத்தையே கிளப்பும். எவரும், பிறர் தம்மைக் குறைவாக நினைப்பதால், தம்முடைய பெருமைக்கே பங்கம் வந்துவிட்டதாக வருத்தப்படுவர்; தம்பேரில் தவறிருப்பினும், பிறரையே குறை கூறுவர்.

எவரும் தன்னைப்பற்றிப் பெருமையாகவே நினைத்துக்கொள்ளுகின்றனர். பிறரைப்பற்றிக் குறைவாகவும் நினைக்கின்றனர். அவர்களெதனையும் தர்க்க ரீதியாக ஆராய்ந்தறிவதில்லை. அப்படிப்பட்டவர்களுடனேயே நாம் அனேகமாகப் பழகுகிறோம். அவர்கள் நாம் குறை கூறுவதின் உண்மையை உணராமலும் அதனை யறிய விரும்பாமலும் தம்மைக் குறை கூறியதற்காக நம் பேரில் வருத்தப்படவே செய்வார்கள்.

நாம் பிறரைக் குறை கூறுவதற்குப் பதிலாக, அவர்கள் ஏன் அப்படிச் செய்கிறார்களென்பதை யறிய முயலவேண்டும். அப்படி முயற்சிக்கும்பொழுது, அவருடைய உள்ளத்தின் நிலைமையும் போக்கும் என்ன மாதிரியாகத்தா னிருக்கின்றன வென்பதையும் நாம் தெரியமுடியும். இப்படியாக, நாம் ஒவ்வொருவரையும் தெரியும்பொழுது எல்லாரையும் மன்னிக்க வேண்டியதாகவே முடியும்.

2. நாம் மனித சுபாவத்தைத் தெரிந்து கொண்டால் பிறரோடு பழகிவரவேண்டிய மாதிரியைத் தெரிந்துகொண்டாற் போலவேதான்.

எவரும் தம்மைப்பற்றிப் பெரிதாக நினைத்துக்கொள்ளுகின்றனர். தம்மைப்பற்றிப் பிறர் பெருமையாகப் பேசுவதைக் கேட்டும் மகிழ்கின்றனர். பிறர் அப்படிப் பெருமையாகப் பேசவேண்டுமென்றும் ஆசைப்படுகின்றனர். ஒரு முக்கியமான ஆளாகத் தாமிருந்து வரவேண்டுமென்றும் விரும்புகின்றனர். இதனை யறியாத எவரும், பிறரோடு சரியாகப் பழகிவர முடியாது.

பிணிவாய்ப்பட்டிருப்பவரும் — கிறுக்குப் பிடித்திருப்பவரும், அவர் மிகத் தாழ்ந்த நிலைமையிலிருப்பினும்—தம்மைப் பிறர் அபிமானிக்கவும் கவனிக்கவுமாக இருப்பதில் ஓரார்வம் கொள்ளுகின்றனர். சிலர், பிணியின்றி, கிறுக்கின்றி வாழ்வதிலும் இப்படியே தங்கள் வாழ்நாளைக் கழிக்கவும் விரும்புகின்றனர்.

உடம்பைப் பேணி வளர்க்கும் மாதிரி, சுயமதிப்பையும் பேணி வளர்க்காத இவ்வுலகில் முகமனை (flattery) விரும்புவதில் ஆச்சரியமில்லை. சாதாரணமாக, முகமனில் உண்மையிருப்பதில்லை. சுயநலமே பொதிந்திருக்கும்; மேலளந்தவாரியாகவும் வரும். ஆதலால், தெரிந்தவர்கள் அதனை விரும்புவதில்லை; பிறருக்கும் அது பயன்படுவதில்லை. சுருங்கச் சொன்னால், முகமன் ஒரு போலி நாணயம்; அது நெடுகலும் கொண்டு செல்லாது. அதனால் ஒரு காலமில்லாவிட்டாலும் ஒரு காலத்தில் ஆபத்து விளைந்தே தீரும். ஆதலால், நம்மைத் தாக்கிப் பேசும் எதிரிகளுக்குங்கூட நாம் பயப்பட வேண்டியதில்லை; நம்மைத் தூக்கிப் பேசும் நண்பர்களுக்குப் பயந்தே யிருக்க வேண்டும்.

நாம் பிறரிடம் போற்றிப் பேசத் தக்க குணநலன்களைக் காணும்பொழுது, அவற்றைப்போற்றித்தான் பேசவேண்டும். அத்தகைய பேச்சு நம்முள்ளத்திலிருந்து உண்மையாகவே பிறப்பதாகும். பிறர் தம்மிடம் இல்லாததையும் இருக்கிறதாக நினைத்துக்கொண்டிருப்பதை வைத்து நாமும் அவர் நினைப்பை யொட்டிப்பேசித் தாளம்போடுவது பிசகேயாகும்.

பிறர் சில காரியங்களிலேனும் நம்மினும் உயர்ந்தவர்களாக இருக்கக்கூடும். அவற்றை நாம் அவர்களிடமிருந்து படித்துக் கொள்ளவும் வேண்டும். நாம் அந்த நன்றியை மறவாது அதைப் பற்றிப் பேசக்கூடிய சந்தர்ப்பம் நேரும்பொழுது அதனைப் போற்றியும் பேச வேண்டும். அதனை அவர்கள் எளிதில் மறக்க மாட்டார்கள்; நாம் மறந்துபோன பிறகுங்கூட, அவர்கள் அதனை ஞாபகத்தில் வைத்திருப்பார்கள்; அவர்கள் அதனைத் தங்கள் ஆயுட்காலமெல்லாம் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டுமிருப்பார்கள்.

3. பிறர் அக்கறையைத் தேவையைத் தெரிந்து அதற்கேற்ப அவர்களுடன் பழகவேண்டும்.

மீனுக்குத் தக்க தூண்டிலில் மீன் விழக் கூடுமேயன்றி, அப்படிக்கில்லாத தூண்டிலில் எப்படித்தான் விழும்? பிறருக்கக்கறையான காரியங்களில் நாமும் அக்கறையெடுத்து வந்தால் மட்டுமே, நமக்கு அக்கறையான காரியங்களில் அவர்களும் அக்கறை கொள்ளுவார்கள். நாம் நினைக்கிற காரியத்தைப்பற்றி பிறர் எப்படி நினைக்கிறார்களென்று தெரிந்து, அதே போக்கிலும் நம் போக்கிலும் நாம் அதை நினைத்துப் பார்க்கவேண்டும். நாம் நம்மைப்பற்றிப் பெருமையாக நினைத்துக் கொண்டிருப்பது போலவே, பிறரும் தம்மைப்பற்றிப் பெருமையாக நினைத்துக் கொண்டிருப்பார்கள். அந்தப் பெருநினைவிற்குப் பொருந்தியதாக நம் வேண்டுகோளிருக்கு மென்றால் தான், நம்முடைய காரியமும் நிறைவேறும். இப்படியாக, உலகம் பூராவையும் நாம் நம்முடன் கொண்டு செல்லலாம். இப்படிச் செய்ய முடியாதென்றால், நாம் தனிக் கட்டையாகத் திரிய வேண்டியதுதான்.

4. நாம் பிறரை நேசித்தால்தான், பிறரும் நம்மை நேசிப்பர்.

பிறரை நாம் காணும்பொழுது, அவர்களை மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் வரவேற்க வேண்டும். பிறர் காரியங்களில் நாம் முன் யோசனையுடனும் தன்னலம் பாராட்டாமலும் திறமையாகவும் நாம் ஈடுபட்டுதவ வேண்டும். நாம் பிறருக்குதவும் பொழுது, அவர்கள்தான் நமக்குதவாதிருக்க முடியுமா? நாம் பிறர்க்குதவாதபொழுது அவர்கள்தான் நமக்கெதற்காக உதவ வேண்டும்? இதனை உணராது, தாம் பிறர்க்குதவாமல் பிறர் தமக்குதவவேண்டுமென்று நினைக்கிறவர்களெல்லாம் ஏமாந்தே போவார்கள்.

நாம் சுடு மூஞ்சியாக இருக்கக்கூடாது. நம்முடைய சொத்தும் சுகமும் நம் மகிழ்ச்சிக்குக் காரணமாகா. அவை அவற்றை வைத்து வாழத் தெரியாதவருக்குச் சங்கடத்தையும் தரும். நாம் அவற்றிற்கு அடிமையாகாது அவற்றைக் கையாண்டுவரும் முறையே நமக்கு மகிழ்ச்சியைத் தரக்கூடும். ஆக, நம் மனமே நம் மகிழ்ச்சிக்குக் காரணமாகும். நம்

அகத்தின் அழகு, முகத்திலும் தெரியவே செய்யும். நமது மலர்ந்த முகமே—நமது ஆடையும் ஆபரணமுமல்ல—பிறரை வசியப் படுத்தும்.

எவரும் தன் பெருமைகளைப்பற்றிப் பிறரிடம் பேச விரும்புவர். அவர்கள் பேச்சைக் கவனித்துக் கேட்பதே, அவர்களுக்கு ஒரு பெருமை தருவதாகும். அவர்களுக்கு த்தத்தம் பாடே பெரியதாக இருக்கும். அப்படியிருக்க, அவர்கள் பேச்சை நாம் இடைமறித்துப் பேசுவதென்றால், அஃது அவர்களுக்கு அதிருப்தியே தரும். அவர்கள் மனம்போல் பேச விட்டுவிட்டால், அவர்களுக்கு நன்மையானதை உண்மையாகச் சொல்லுவதற்கும் நாம் அதிகமாகப் பேசவேண்டியதிராது.

எவரிடமும் அவரவர்க்குப் பிரியமான காரியத்தைப் பற்றிப் பேசுவதாயிருந்தால், நம் பேச்சையும் அவர்கள் விருப்பத்துடன் கேட்பார்கள். நம் பேச்சில் அவர்கள் அமிழ்ந்திருக்கும் சமையம், நம்முடைய காரியத்தையும் வெளியிட்டால், மற்றப்படி ஆட்சேபிக்கக் கூடியவரும் நமக்குச் சரி சொல்லிவிடுவார்.

நம் நோக்கமறிந்து பிறர் பேசுவதில் நாம் மகிழ்வதுபோல, பிறர் நோக்கமறிந்து நாம் பேசுவதிலும் அவர் மகிழவே செய்வார். அப்படியாக, நம் பேச்சை ஆரம்பிக்கும்பொழுது அவருக்கு எத்தனைதான் அவசரமாயிருந்தாலும் நம்பேரில் வெறுப்பிருந்தாலும் நம் பேச்சைக் கேட்கவே அவர் விரும்புவார். நாம் பிறரிடத்தில் அவரைப்பற்றியே பேசும்பொழுது அவருக்கு நேரம் போவதும் தெரியாது. அப்படிச் சமையமே நம் காரியத்தைச் சொல்லிக்கொள்ளுவதற்கும் ஏற்ற சமையமாகும். (தொடரும்)

* D. B. Taraporevala Sons & Co., Bombay, 5th Indian Edition, pp. 301, Re. 1.

---

4. வேளாண்மை:

நெல்லுக் குரமிடுதல்

Chapter XI Rice in Madras, By Ramiah

(சாரம்) II

குழையுரம்

நாம் முன் விவரித்தபடி குழையுரத்தின் முக்கிய பயன் மறை முகமாகத்தான் கிடைக்கக்கூடும். ஆதலால், நெற்பயிராகும் நிலத்தில் வளரும், செடிகளையே பசுங்குழையாக (Green manure) மடக்கி உழுது கொள்வது நல்லதா? வெளியேயிருந்து இலைக்குழை (Green leaf manure) கொண்டுவந்து சேர்ப்பது நல்லதா? என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். நிலத்தில் கொழிஞ்சி முதலிய பயற்றுஞ்செடிகளே சாதாரணமாக வளருகின்றன. அவை நிலத்தில் காலகச்சத்து மிகுதியாக இருந்தால், அந்த நிலத்திலுள்ள சத்தையே எடுத்துக்கொள்ளுகின்றன. பயற்றுஞ் செடிகள் தவிர்த்து மற்றச் செடிகள் வளருவதாயிருந்தாலும், அவையும் தரையிலுள்ள காலகச் சத்தையே எடுத்துக்கொள்ளுகின்றன. நிலத்தில் காலகச்சத்து குறைவாக இருந்தால்மட்டும் பயற்றுஞ் செடிகள் காலகச் சத்தை ஆகாயத்திலிருந்து எடுத்துக் கொள்ளுகின்றன. நிலத்தில் வளர்ந்த செடிகளை மடக்கி உழும்பொழுது அவற்றிலுள்ள காலகமானது ஆகாயத்தோடு கலந்து போகிறதால், அந்தக் குழையினால் நேர்முகமான பலனிருப்பதில்லை. இக்காரணத்தால் வெளியேயிருந்து கொண்டுவந்து சேர்த்து உழுவதுதான் நல்லதென்றேற்படும்.

நிலத்திலேயே வளர்ந்த பயற்றுஞ் செடியை உழுவதால் கிடைக்கும் மறைமுகமான பலனுக்குக் குறையாத அளவு அப்படியே வளர்ந்த மற்றச் செடிகளை மடக்கி யுழுவதாலும் கிடைக்கும். இலங்கைப் பரிட்சைகளிலிருந்து நெற் பயிர் வளர வளர அந்த நிலத்தின் பசுங்குழை உரமும் (Green manuring) அழுகிக் கெட்டு அதிலிருந்து வெளியேறும் ஏராளமான நவச்சார ஆவி நெற்பயிருக்குக் கொஞ்சம் நேராக உதவுவதையும் அறிந்திருக்கிறார்கள்.

இலைக் குழை உரம் (Green leaf manure)

வயல்களுக்குச் சமீபத்தில் காடுகளிருக்குமிடங்களில் இலைக்குழை வண்டி பாரமாகக் கொண்டுவந்தோ வாங்கியோ நிலத்தில் சேர்க்கப்படுகிறது. இளகியதும் நன்றாகத் தண்ணீர் வடியக் கூடியதுமான நிலங்களுக்கு இலைக் குழையுரம் சிறந்ததென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. தென் கன்னடத்தில் இலைக் குழையை உடனே உரமாக உபயோகிப்பதில்லை. மாட்டுத் தொழுவங்களில் மாடுகளுக்குப் படுக்கையாக முதலில் அவற்றை விரித்து அவற்றோடு சாணியும் கோமயமும் கலந்த பிறகுதான் அவற்றை வயல்களுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கின்றனர். வெளியே யிருந்து இலைக் குழை கொண்டு வரும்பொழுது, என்ன இலை கிடைத்தாலும் கொண்டு வருகின்றனர்; என்றாலும், நிலத்தில் சீக்கிரமாக அழுகக் கூடிய இலையே அதிகப் பலன் தரக்கூடியதாக இருக்கிறது. ஆதலால், பயற்று வகைச் செடிகள் மரங்களின் (Leguminous shrubs and trees) இலைகளே முக்கியமாக விரும்பப்படுகின்றன. இலைக் குழைகளில் கொழிஞ்சி யிலைகளும் கொன்றை யிலைகளும் புங்கம் இலைகளுமே மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன. மலையாளத்தில், பக்கத்திலிருக்கிற காடுகளிலும் சாலைகளிலு மிருந்து என்ன இலை கிடைத்தாலும் அஃதே ஏற்றத் தாழ்வு கருதாமல் உபயோகிக்கப்படுகிறது.

பசுங் குழை. (Green manure)

முன் ஏகதேசம் வயல்களில் பசுங் குழைச் செடிகள் வளரும். இப்பொழுது விவசாய இலாகா முயற்சியின் காரணமாக முறையாகவே சில செடிகள் பயிரிடப்படுகின்றன. பசுங் குழைச் செடி விதைகளைச் சேகரிப்பதும் அவற்றை வைத்திருந்து விற்பதும் இப்பொழுதும் விவசாய இலாகா செய்துவரும் முக்கிய வேலையாக இருந்து வருகிறது. சாதாரணமாக, சிபார்சு செய்யப்படும் உரப் பயிர்களெல்லாம் பயற்றும் பயிர்களாகவே யிருக்கின்றன. நிலம் ஒரு போகம் அல்லது இரு போக நிலமாக இருப்பதையும், நிலத்தின் தரையின் தன்மையையும், தண்ணீர் வசதியையும் பொறுத்ததாகவே பசுங்குழைச் சாகுபடியின் பயன் அமையக்கூடும். கனத்த களிமண் தரையாயிருக்கும்வயல்கள் சாதாரணமாக ஒரு போக நிலங்களாக இருக்கின்றன. அவை, வெப்பமான காலத்தில் தரிசாக இருக்கும்பொழுது அவற்றில் ஆழமான பிளவுகளேற்படுகின்றன. ஆகையால், நிலத்தில் தண்ணீரைத் தாராளமாகப் பெருக்கினாலன்றி அவற்றில் பசுங்குழை உரச் செடிகளை விதைத்துப் பயிரிடுவது மிகவும் கடினமான வேலையாகும். அப்படித் தரை உலர்ந்திருக்கும்போது உழுது அதில் தண்ணீரை விட்டுத் தொளிக் கலக்குவதினாலும், தரை அதிகமாகவும் இறுகிப் போகக்கூடும்; அதன் பின் தண்ணீர் கீழே இறங்குவதும் சிரமப்படும். இளகிய செம்மண் தரைகளில் கோடை சாகுபடி செய்வது அத்துணைத் தீங்காகத் தோன்றுவதில்லை. மருதேருவிலும் ஆடுதுறையிலும் செய்த பரிட்சைகளிலிருந்து தரை கடுமையாக இருந்தாலுங்கூடப் பசுங்குழை உரத்தை மடக்கி உழுவதால், அது கோடைச் சாகுபடியின் பாதகமான பயனையும் மாற்றிவிடுவதாகத் தெரிகிறோம். கோடையுழவினால் பாதகம் ஏற்படுவானேன் என்பதனையும் பசுங்குழை உரம் அதனை எப்படித்தான் மாற்றுகிறதென்பதனையும் நாமறிய முடியவில்லை.

சாதாரணமாக, கோதாவரிதீர வாசத்தில் நெல் நவம்பரிலேயே அறுவடையாகிவிடுகிறது. அடுத்த ஜூன்வரை நிலம் சாகுபடி யில்லாமல் காலியாகக் கிடக்கிறது. நெல் அறுவடையாவ

தற்கு முன்னதாகவே அதன் கீழ் சணல் (Sunnhemp) பயிரிடப்படுகிறது. மார்ச்சு மாதத்திற்கு முன்னதாகவே அதனையறுத்து மாட்டுக்குத் தீனியாகவும் போடப்படுகிறது. ஆக அடுத்த நெற் பயிருக்குப் பசுங்குழை யுரமாக உதவ அதில் கொஞ்சமே விடப்படுகிறது. ஆற்றுப் பாசனத் தண்ணீர் ஏப்பிரல் முடியக் கிடைப்பதால் மார்ச்சு மத்தியில் பசுங்குழை யுரப் பயிர் சாகுபடி செய்வதற்கும் அதனை ஜுன் மாதம் மடக்கி உழுவதற்கும் சௌகரிய முண்டு. உரமே போடாமலும் அதிக உழவில் லாமலுமே அந்தத் தீரவாசத்தின் பெரும்பாகத்தில் ஏக்கரொன்றுக்கு நெல் முதற் போகம் 3,000 இராத்தலுக்கு மேலும் அந்த அளவிற்குக் குறையாமல் வைக்கோலும் கிடைக்கிறது.

கோடையில் மழையே யில்லாமல் தரையும் வெகு ஆழமாகப் பிளந்திருக்கும் நிலத்தில் உரமே போடாத நிலைமையிலும் பயிர் மிகவும் மோதலாக வளருகிறது. மணி பிடிக்குமுன் சாய்ந்துவிடாதபடி நெற்பயிரை இரண்டொரு தடவை வெட்டியும் விடவேண்டியதிருக்கிறது. இந்த மாதிரித் தரைக்குப் பசுங்குழையுரம் பயன் படுமோ வென்பது சந்தேகமே. நெல்லுக்கு ஊடே பசுங்குழை உரப் பயிரை விதைத்து ஜுன்வரை வளரவிடுவதும் அதற்கிடையில் இரண்டொரு தடவை வெட்டி மாட்டுக்குத் தீனியாகப் போடுவதும் வழக்கமாகி வருகிறது. ஆனால் சில பசுங்குழைகளே இப்படி உதவக்கூடும்.

(தொடரும்)

5. கூட்டுறவு :

கூட்டுறவுச் சங்கங்களை நடத்துவதா, முடிவு கட்டுவதா?

சென்ற பன்னிரண்டாண்டுகளாகப் புதிதாக வேலை துவக்கும் சங்கங்களைக் காட்டிலும் முடிவு கட்டப்படும் சங்கங்கள் அதிகமாகவே யிருந்து வருகின்றன. அப்படிப் புதிதாகத் துவக்கும் சங்கங்களும் நீடித்து வேலை செய்யக்கூடியனவாக அமைக்கப்படுவதாகச் சொல்லுவதற்கில்லை. பழைய சங்கங்கள் சரியாக வேலை செய்யாத காரணங்கள் தெரிந்திருந்தும், அவற்றை நீக்கக் கூடிய விதமாகச் சங்க விதிகள் இதுகாறும் திருத்தப்படவுமில்லை.

கூட்டுறவுச் சங்கங்கள் பணக்காரர்களுக்கு மட்டுமே பயன்படுவதாக இல்லாமல், ஏழைகளுக்கும் பயன் படக்கூடிய விதமாக அமைக்கப்பட வேண்டும். உழைப்பே யில்லாத காரணமாக வேனும் போதிய உழைப்பில்லாத அல்லது கூலி கிடைக்காத காரணமாகவேனும் மிச்சம் காண முடியாதவர்களுக்கும் மிச்சம் காணக் கூடிய விதமாக உழைப்பும் கூலியும் தரத்தக்க சங்கங்கள் அவர்களுக்கெனத் தனியாகவேனும் அமைக்கப்படவேண்டும். இப்போதுள்ள பிரதம சங்கங்களின் வேலையைப் பலப்படுத்தவும் வேண்டும். புதிதாகவும் பிரதம சங்கங்களேற்படுத்துவதிலேயே கவனம் முக்கியமாகச் செலுத்தப்படவேண்டும். நன்றாகப் பிரதம சங்கங்கள் வேலை செய்வதாய் அல்லது செய்யக்கூடியதாயிருந்தால் மட்டும், அவற்றின் வேலையை விருத்தி செய்வதற்கான மத்திய சங்கங்களை யேற்படுத்தவேண்டும். அப்படிக்கில்லாது மத்திய சங்கங்களேற்படுத்திக்கொள்ளுவதால், அவற்றிற் கடிப்படையாக இருக்க வேண்டிய பிரதம சங்கங்கள் அப்படிக்கில்லாத பொழுது மத்திய சங்கங்களும் கெட்டுப் போகவே செய்யும்.

வரையறுக்கப்படாத சங்கங்களில் நிகரச் சொத்து மதிப்பில் இத்துணையிலொரு பங்கும், வரையறுக்கப்பட்ட சங்கங்களில் பங்குத்

தொகைக்கு இத்துணை மடங்கும் கடன் தரலா மென்றிருந்துவரக் கொஞ்சமும் நியாயமில்லை. வரையறுக்கப்பட்ட பொறுப்பா யிருப்பினும் சரி, வரையறுக்கப் படாத பொறுப்பாயிருப் பினும் சரி. அவரவர் மிச்சமே உச்ச அளவாகக் கடன் பெறவும் சாமீன் நிற்கவும் கூடுமென்பது சங்க விதிகளிலேயே இருக்கவேண்டும். உறுப் பினர் பங்குத் தொகையும் அந்த உச்ச அள விற்குத் தக்கதாகச் செலுத்தப்படவேண்டும்.

கூட்டுறவுச் சங்கத்தில் சேர விரும்புப வரையெல்லாம் சேர்த்துக்கொள்ளவும் கூடாது. (Admission must be selective). நாண யத்தைக் காப்பாற்றிவரக் கூடிய யோக்கியர் களை மட்டும் சேர்ப்பதென்றிருக்க வேண்டும். கூட்டுறவுச் சங்கத்திலிருந்து விலக்கப்பட்டவர் களை மூன்ருண்டுகளுக்கிடையில் சேர்க்கவுங் கூடாது.

பிரதம சங்கங்களில், தலதாபன தேவதா னக் கழக உறுப்பினர்களேனும் சட்டசபை உறுப்பினர்களேனும் பஞ்சாயத்தாராகவே னும் அதிகாரியாகவேனும் இடம் பெறுதலென் பதுவுங் கூடாது. அப்படி யிடம் பெறுதலால் வெளிக் கட்சிகள் சங்கத்திலும் இடம் பெறக் கூடும். அது மட்டுமல்ல; அரசியல் தலதாப னத் தானங்களெல்லாம் போட்டியில் பெறப் படுவன; ஆரவாரத்திலேயே வளர்வன. கூட் டுறவோ அதற்கு மாருன உறவிலும் அடக்கத் திலும், அரவ மில்லாத வேலையிலும் வளர்வது. ஆதலால், அவர்கள் தங்கள் ஆரவாரப் போட் டிப் பழக்கத்தாலும் பயிற்சியாலும் கூட்டுறவு வேலைக்குத் தகுதியற்றவர்களாகவும் ஆகிவிடுகி ருர்கள்.

சங்கத்துக்குச் செலுத்தவேண்டிய கடன் தொகை பங்குத்தொகை கட்டணம் அபராதம் முதலியனவற்றை மூன்று மாதத்திற்கு மேல் பாக்கி வைத்திருப்பவர், அப்படி மூன்று மாத மானது முதல், தம்முரிமைகளைச் செலுத்த அருகதை யற்றவராக வேண்டும். தீர்ப்பான பின்னரே கடனைச் செலுத்தித் தீர்ப்பவர் அப் படித் தீர்த்தது முதல் தம் தானத்தை யிழந்து விடவும் வேண்டும். பிரதமச் சங்க உறுப்பி னர் ஒவ்வொருவரும் தங்கள் மிச்சத்தில் எதொரு பாகமேனும் சங்கத்தில் இருப்புக் கட்டி வரவேண்டுமென்ற கட்டாயமு மிருக்க வேண்டும்.

சங்கங்கள் அவ்வவற்றின் திறமைக்குத் தக்கதாகப் பிற தாபனங்களின் அதிகாரிகளின் கண்காணிப்புக் குறைந்திருக்கத் தங்கள் வேலை களைத் தாங்களாகவே செய்துவர இடமிருக்க வேண்டும். முதல்தரச் சங்கங்கள் தாங்களா கவே புது உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள் ளலாமென்றிருக்க வேண்டும். இரண்டாந்தரச் சங்கங்கள் மேற்பார்வைக் கழகம் அல்லது கூட் டுறவு இலாகா அதிகாரியும் கலந்தே அப்படிச் செய்வதென்றிருக்க வேண்டும். மூன்ருந்தரச் சங்கங்கள் பாங்கையும் கலந்தே அப்படிச் செய்துகொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். நாலாந்தரச் சங்கங்கள் பாங்கின் மேற்பார்வை யிலிருந்தே திருந்த வேண்டும். மூன்ருந்தரச் சங்கமாகும்வரை புது உறுப்பினர்களைச் சேர்ப் பதென்பதுங் கூடாது. இதுபோலவே, முதல் தரச் சங்கங்கள் மேற்பார்வைக் கழகத்துக்குத் தகவல் கொடுக்கும் அளவிலேயே நின்று பாங் கில் கடன் வாங்கிக் கொள்ளலாமென்றிருக்க வேண்டும். இரண்டாந்தரச் சங்கத்துக்கு மேலே சொல்லிய பிரகாரம் மேற்பார்வைக் கழகம் அல்லது கூட்டுறவு அதிகாரியின் புள்ளி வாரி அங்கீகாரமும் மூன்ருந்தரச் சங்கத்திற்கு அத்துடன் பாங்கின் புள்ளிவாரி அங்கீகாரமு மிருக்கவேண்டும். நான்காந்தரச் சங்கத்திற்குப் புதுக் கடன் கொடுப்பதென்பதுவுங் கூடாது.

மேற்பார்வைக் கழகங்கள் தாலுகாவிற் கொன்றேனும் அமைக்கப்படலாம். முதல்தரச் சங்கம் அதிகமாக இருக்குமாயின் அப்படிச் சங்கங்களின் வட்டகையில் 35 சங்கங்களுக்கு ஒரு மேற்பார்வைக் கழகமுமிருக்கலாம். முதல் தரச் சங்கங்கள் இரண்டு பிரதிநிதிகளும் இரண்டாந்தரச் சங்கங்கள் ஒவ்வொரு பிரதி நிதியும் மேற்பார்வைக் கழகத்திற்கு அனுப்ப உரிமை இருக்கலாம். மூன்ருந்தரச் சங்கங்கள்

மேற்பார்வைக் கழகநிதி செலுத்தும் பொறுப்பைத் தவிர மேற்பார்வைக் கழகத்தில் உரிமையொன்றும் செலுத்துவதற்கிடமிருக்கக் கூடாது. முதல்தரச் சங்கப் பிரதிநிதிகளே மேற்பார்வைக் கழக அதிகாரிகளாக இருக்கவும் முதல்தர இரண்டாந்தர சங்க உறுப்பினர்களே டைரக்டர்களாக இருக்கவும் கூடியதாக இருக்கவேண்டும். மேற்பார்வைக் கழக நிருவாகம் ஐந்தல்லது ஒன்பது டைரக்டர்களுக்குள்ளிருக்கலாம். அப்படிக்குப் பிரதிநிதிகள் அமையக்கூடாத பொழுது இரண்டு வருடம் வரைக்கும் கூட்டுறவுப் பதிவாளரும் நியமிக்கலாம். அதற்குமேலும் தகுதியான ஆட்கள் மையாத பொழுது மேற்பார்வைக் கழகத் தாபனத்தால் நன்மையான வேலையெதுவும் செய்து கொள்ள முடியாதென்றே சொல்லவேண்டும். அதனை உலைத்துவிடுவதே தகுதியாகும்.

இப்படியாக, சங்கத்தில் உறுப்பினர்களைச் சேர்ப்பதிலும் சங்கங்களின் வேலை முறையிலும் தாமாகவே கண்டிக்கக் கூடியதும் உற்சாகப் படுத்தக் கூடியதுமான திட்டங்கள் இருந்தாலன்றி, சங்கங்களின் வேலையில் திருப்திகரமான விருத்தியை நாம் காணவும் முடியாது; காலம் போகப் போக அவை தீவிரமாகவும் கெட்டுவரும்; அவற்றை முடிவுகட்டும் வேலையே பின்னும் அதிகமாகும்.

---

6. கல்வி :

ஆரம்பப் பள்ளிப் பாடத்திட்டக் குறிப்புக்கள்

(சாரம் VII)

தேகப்பயிற்ச்சி (தொடர்ச்சி)

ஈ. விளையாட்டுகள்

ஆரம்பப் பள்ளிப் பிள்ளைகளின் வயது தம்மை வற்புறுத்தலான (Self assertion) காலமாகும். ஆதலால், அவர்கள் ஓடுவதிலும் குதிப்பதிலும்குனிவதிலும் ஏறுவதிலும் எறிவதிலும் மற்றும் இவை போன்ற விளையாட்டுகளிலும், தங்கள் உடல் திறமைகளை விருத்தி செய்து கொள்ளவும் அவற்றை யிணைத்துப் பூர்த்தி செய்துகொள்ளவும் விரும்புவார்கள். ஆகையால், அத்தகைய விளையாட்டுகளில் நாம் அவர்களை உற்சாகப் படுத்தவேண்டும். அதனோடு, அவற்றில் அவர்களைக் கவனமாக நடத்தியும் வரவேண்டும். அந்த வயதில், தம்தம் திறமை பார்த்தலே மிகுந்திருக்கும்; சிலரோடு சேர்ந்து விளையாடுவதும் அவ்வளவாக இராது. ஓடி மறைதலும் தேடிப் பிடித்தலும் துயர்ந்தோடுதலும் பிடிபடாமல் நழுவிப் போதலும் இவை போன்ற விளையாட்டுகளிலேயே அந்த வயதில் அதிகப் பிரியமாயிருக்கும். இவற்றோடு ஆசிரியர் ஏதேனும் புது விளையாட்டுச் சேர்த்துக் கொள்ளுவதென்றாலும், அதுவும் அந்தப் போக்கிலேயே இருக்கவேண்டும்.

உ. கணக்கான கூட்ட முயற்சிகள் (Rhythmic activities)

இப்பொழுது சில ஆண்டுகளாகக் கூட்டமாகக் கலந்து கணக்குப்படி செய்யும் முயற்சிகளால் மிகுந்த பயனுண்டாகக் கூடுமென்று வற்புறுத்தப்படுகிறது. பொதுவாக, பள்ளி வேலைகளில் அதற்கொரு முக்கிய இடந்தர வேண்டுமென்றும் கல்வியாளர்கள் வற்புறுத்தி வருகின்றனர். "எவ்வளவுதான் இழிந்த (The vulgarest crowd) கூட்டமாக இருந்த போதிலும், அவர்ளெல்லாரையும் ஒன்று சொன்னாற்போல ஒரு முறையான வேலையைச் செய்யத் தூண்டும்பொழுது, மனித வர்க்கத்தின் ஏற்றத்தையும் அது துலக்கும்" என்று தாம் நம்புவதாகத் திரு. கார்லைல் கூறுகிறார். அவர்கள் அப்படி ஒன்று சேர்ந்து வேலை செய்யும் பொழுது, அதன் மயக்கத்திலாழ்ந்தவர்களாக, தங்களுடைய மந்தமான மடமையை

யும் மறந்து, தாங்களெல்லாரும் ஒரே மாதிரியானவர்கள், தாங்கள் ஒருவருக்கொருவர் சகோதரர்கள் என்ற உணர்ச்சி ததும்பி நிற்கப் பெறுகிறார்கள்.

கிராமாந்தர நடனங்களே மிகவும் சிறப்பாகவும் சர்வ சாதாரணமாகவும் எல்லாரும் அனுபவிக்கக்கூடிய முறையான ஆட்டங்களாகும். ஆனால் அவற்றின் உயர்வையும் பலவேறு வகைகளையும் எல்லா ஜில்லாக்களுக்கும் பொதுவாக இருக்கும் பாடத் திட்டக் குறிப்பில் குறிப்பிட முடியவில்லை. ஆகையால், ஆசிரியரே அவற்றில் பிள்ளைகளின் வயதிற்கும் போக்கிற்கும் ஏற்றவற்றைச்சேகரித்துக் கொள்ளவேண்டும். கை தட்டுதலையும் கால் மிதித்தலையும் அந்தந்தப் பிரதேச சாதாரண ஜனங்களுடைய பாட்டுகளோடிணைத்துவிடலாம். அப்படிச் சாதாரண ஜனங்களுடைய ஆடல் பாடல்கள் ஒவ்வொரு பள்ளியிலும் முறையாகப் பாடமாகும்வரை, ஒவ்வொரு ஆசிரியரும் அவற்றைச் சேகரிக்கவும் அவற்றை விசேடப் பிரயத்தனத்தோடு படிப்பிக்கவும் வேண்டும். அது நம் தேசிய வாழ்க்கை அபிவிருத்திக்காகவும் கல்வியின் முன்னேற்றத்திற்காகவும் அவசியம் செய்யப்படவேண்டிய வேலையாகும்.

ஊ. வரிசையாக நடத்தல் (Marching)

வரிசையாக நடத்தலும் முறையாகச் செய்யும் முயற்சிகளில் ஒன்றாகும். இருப்புப் பாதை மாதிரியாக வரிசையாகத் தொடர்ந்து பிள்ளைகள் விளையாடுவதும் அதனைச் சேர்ந்ததேயாகும். ஐந்தாவது வகுப்புப் பிள்ளைகள் வரிசையையும் முறையையும் உணரக்கூடுமாதலால், அவர்களுக்கு ஒழுங்காக நடக்கும் அப்பியாசங்கள் தரவேண்டும். ஆனால், அதில் அவர்கள் சித்திபெறுவது ஆசிரியரின் முன் மாதிரியைப் பொறுத்ததாகவே யிருக்கிறது. அதுவும் அவர் பயிற்சி காலத்தில் தம்மை ஆயத்தம் செய்துகொள்ளுவதையும் அவருடைய ஆர்வத்தையும் பொறுத்தே யிருக்கிறது. அப்படிச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்ட ஆசிரியருக்கு மறு பயிற்சியும் (Refresher courses சாதாரணப்படைப் பயிற்சியும் ஒரு வகையான பயிற்சி (Compensatary training) தரக்கூடும். இவற்றையேனும் ஆசிரிய சங்கங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

எ. கவாத்து (Drill)

கவாத்து அடிக்கடி படிக்கவேண்டிய அப்பியாசமில்லை. அஃது ஒரு வரிசையாகச் செல்லுவதற்குப் பழகும் பழக்கமேயாகும். ஆரம்பப்பள்ளி மாணவர்களின் போக்கைக் கவனித்தால், அவர்களுக்குக் கவாத்துப்பயிற்சியில் விருப்ப மிருப்பதில்லையென்பது தெரியவரும். ஒவ்வொரு பள்ளி மாணவனும் ஏறி யிறங்கவும் தொங்கவும் ஊஞ்சலாடவும் தள்ளவும் இழுக்கவும் உருளவும் ஓடவும் குதிக்கவும் எறியவும் அடிக்கடி இப்படியாக இயற்கையான விளையாட்டுகளில் அதி பாலியமுதல் ஈடுபடச் சந்தர்ப்பமளித்து வந்தால், திருத்தப் பயிற்சிகளும் அவர்களுக்குவேண்டியிரா. ஆதலால், ஆசிரியர்கள் பாடத் திட்டக் குறிப்பில் குறித்துள்ள நேரத்தில் மூன்றிலொரு பாகத்திற்குள்ளாகக் கவாத்திலும் மூன்றிலிரண்டு பாகமோ அதற்கும் அதிகமாகவோ இயற்கையாகவே புத்துயிரளிக்கும் பயிற்சிகளிலும் செலவிடவேண்டும்.

ஏ. உயர்தர ஆரம்பக் கல்வியின் போக்கும் அதன் தேவைகளும்.

இந்தக் காலம்தான், யௌவனதிசையின் ஆரம்பம்; பிறரைப் போலும் விளையாட்டாகவும் செய்துவருவதை யொழித்துவரும் காலம்; பிறரோடு சேர்ந்து விளையாடத் துவக்கும் காலம்; கால்பந்து, தென்னிக்காயிட்,பாட்மிண்டன் விளையாட்டுகளையும் நாட்டு விளையாட்டுகளையும் விரும்பும் காலம்; வெளியிடங்களில் தங்குவதிலும் சாரணப்படையில் சேர்ந்துழைப்பதிலும் பிரியம்கொள்ளும் காலம். ஆகையால், இந்தக் காலத்தில் ஏதேனும் ஒரே விளையாட்டில் புகுவதாக இல்லாமல், பல விளையாட்டுகளிலும் ஒரே விளையாட்டிலும் பல தானங்களிலும் இருந்து விளையாடவும் செய்யவேண்டும்.

பலர் கூடி விளையாடும் விளையாட்டுகள்.

பலர் கூடிச்செய்யும் பயிற்சிகளாலும் அதுவும் விசேடமாகப்புத்துயிரளிக்கும் பயிற்சிகளாலும் விளையாட்டுகளாலும் பலவேறு வகையான வேலையையும் சிறு கூட்டமாக விளையாடுவதால், பிள்ளைகளுக்கு அந்த விளையாட்டுகளில் அதிகப் பயிற்சியு மேற்படும். அவர்கள் அதிக சுறு சுறுப்பாகவும் விளையாட நேரும். திறமையும் விரைவும் அதிகமாகும்; ஒழுங்கும் அமையும். சிறு கூட்டங்கள் ஒவ்வொன்றும் மற்றவற்றோடு போட்டி போட்டு விளையாடுவதினாலும் விளையாட்டுகளிலும் அக்கறை அதிகமாகும்; திறமையும் வளரும். அதிகப் பிள்ளைகள் ஒரே நேரத்தில் விளையாடுவதற்கும், அதனால் நேரம் மிச்சமாவதற்கு மிடமுண்டு. இரண்டொரு கூட்டங்கள் புதுப் பயிற்சிகள் செய்யவும் மற்றவை பழைய விளையாட்டுகள் விளையாடவும் சாத்தியமாகும். வகுப்புப் பூராவும் ஒரே கூட்டமாக விளையாடுவதென்றால், இப்படியெல்லாம் செய்ய முடியாது.

இப்படிக் கூட்டங் கூட்டமாக விளையாடிப் பழகுவதென்றாலும்,சாவகாசமானநேரங்களில் புத்துயிரளிக்கும் அல்லது பொழுது போக்கிற்குதவும் தனிப் பயிற்சிகளிலும் பிள்ளைகளைப் பழக்கவேண்டும். அப்படிப் பழக்காதுபோனால் பள்ளிக்கூடம் விட்டு விலகிய பின் தாங்கள் தனியாக இருக்கும்பொழுது, நல்லவிதமாக நேரத்தைச் செலவழிக்க முடியாது போகும். பள்ளிக்குப் பள்ளி போட்டி நடக்கிற காலங்களில் பரபரப்பு அதிகமாதலையும் பலங் குறைந்த சிறிய மாணவர்கள் பலம் நிறைந்த பெரிய மாணவர்களோடு போட்டி போடுவதையும் தவிர்க்கவேண்டும்.

ஐ. சுகாதாரக் கல்வி.

சுக வழிப் பழக்கங்கள் சத்தான உணவு சுகாதார விதிகள் இவற்றை அனுசரிப்பதற்கில்லாமல், தேகாப்பியாசம் செய்து வருவதிலும் பயனில்லை. ஆகையால், பாடத் திட்டத்தில் கண்டபடி தேக திட்டத்தில் அக்கறை கொள்ளவும், சுகாதாரப் பழக்க வழக்கங்களையறிந்து அனுட்டிக்கவும் வேண்டும். ஆகையால், சுகாதாரக் கல்வியும் உடற் பயிற்சியும் சேர்ந்தே வரவேண்டும். அவை ஏட்டுப் படிப்பாக இல்லாமல், ஒவ்வொரு நாளும் தங்கள் வாழ்க்கையில் அனுட்டித்து, எளிய வாழ்வாயினும் சுகமாகவும் பயன்படும் படியாகவும் வாழும் குடியானவனாக வாழ்ந்து வரச்செய்ய வேண்டும். பள்ளிக் கட்டடங்கள் சுற்றுவெளிகள் தெருக்கள் இவை ஒழுங்காகவும் சுத்தமாகவு மிருக்குமாயின், சுகாதாரம் வெறும் பேச்சாக இல்லாமல் சாதாரணமாக அனுட்டிக்கப் பட்டு வருமாயின், தேகப் பயிற்சியால் அதிக நன்மையும் ஏற்படக்கூடும். வைத்தியப் பார்வையிருக்கும் பள்ளிகளிலெல்லாம் வைத்தியருக்கும் ஆசிரியருக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கவேண்டும். தவிர்க்கக்கூடிய பிணிகளையும் தவிர்த்திடவேண்டும். மாணுக்கர்கள் புத்திசாலித் தனமாகவும் களைத்துப்போகாமல் விருத்தியாக வளர்ந்து வரும்படியும் செய்ய வேண்டும்.

சத்துக்குறைவான ஊட்டத்தை அவசியம் கவனித்துத் திருத்தவேண்டும். மாச்சத்து நிறைந்த உணவைச் சுருக்கவேண்டும். அரிசி சருக்கரை வாழைக்காய் நெய் எண்ணெய்யைக் குறைத்துத் திடத்தையும் உயிர்ச் சத்தியையும் நிரந்தரமாக விருத்தி செய்யக்கூடிய கூழ் வரகு துவரை முதலிய காலகம் நிறைந்த (Nitrogenous) உணவுகளை அதிகப்படுத்தவும் வேண்டும்.

ஒ. தேகப் பயிற்சிக்குத் தேவையான நேரம்.

நித்தம் பதினைந்து அல்லது இருபது நிமிடத் தேகப்பயிற்சி ஒருவர் திடமாக இருந்துவரப் போதுமானதென்ற சொல், வளரும் பிள்ளைகளுக்குப் பொருந்தாது. ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்கு அவர்கள் தசையை அசைக்கும் முயற்சிகள் குறைந்தது மூன்றல்லது நான்கு மணிநேரமாவது இருக்கவேண்டும். ஆகையால், பாடத்

திட்டத்தில் குறித்திருப்பதுவுந் தவிர அவர்கள் பிரியம்போல் நினைத்த நினைத்த விளையாட்டுகளெல்லாம் விளையாடப் போதிய சந்தர்ப்பம் தரவேண்டும். பள்ளிக்கூட வேலை இது சாத்தியமாகக் கூடிய விதமாக அமையவேண்டும். இரண்டொரு ஆசிரியர்கள் இப்படிப் பிள்ளைகள் தனியாக விளையாடுவதையும் கவனித்து வரவேண்டும். இப்படியாக விளையாடுவதற்குள்ள ஆசைதான் வீட்டில் வேலை சொல்லாத நேரம் பள்ளிக்கூட நேரத்திற்கு முந்தியதாயிருப்பினும் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திற்கு வந்து விளையாடத் தூண்டுகிறது. பிள்ளைகளுக்குத் தங்கள் பிரியம்போல் விளையாடுவதற்கு நேரம் எவ்வளவு அதிகமாகக் கிடைக்கிறதோ அவ்வளவிற்குப் பள்ளிக்கூடத்திற்கு வராமலு மிருக்கமாட்டார்கள்; பள்ளிக்கூடத்திற்கு வந்தும் நழுவமாட்டார்கள்.

ஒவ்வொரு மாணுக்கனுக்கும் குறைந்தது 50 சதுர அடி விளையாடுவதற்கு வேண்டுமெனப் பாடத்திட்டக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. 250 சதுர அடி இருப்பது நல்லதாதலால், கூடுமாயின் அந்தப்படியே அமைவதற்கும் முயற்சிக்க வேண்டும்.

(தொடரும்.)

---

7. சுகாதாரம் : குடும்ப வாழ்க்கை.

நாம் புகைக்குடியை நிறுத்துவ தெப்படி?

How to stop smoking ?

பண்டிதர் கெல்லாக் புகைக்குடிகாரரை ஒன்று தாமாகப் புகையிலையை விரும்பாதிருப்பினும் பிறர் புகை குடிக்கிறபொழுது அவர்களோடு சகசமாகக் குடிக்கிறவர்கள், இரண்டு புகைக்குடியினுல் தங்களுக்கு எதொரு திருப்தியும் ஏற்படாதிருந்தும் பிறரோடு குடித்துப் பழகி விட்டதனுல் அந்தப் பழக்கத்தை விட முடியாது. புகை குடிக்கிறவர்கள், மூன்று புகை குடிப்பதால் ஒருவிதமான வெறி மயக்கம் ஏற்படுகிறதற்காகக் குடிக்கிறவர்கள், நான்கு புகை குடியாதிருந்தால் பெருந்துன்பத்திற்கும் அசௌகரியத்திற்கும் இடமாகிறதென்று புகை குடிக்கிறவர்கள் என நான்கு வகையாகப் பிரிக்கின்றனர்.

முதல் மூன்று வகுப்பினரைப் பற்றி நாம் அதிகமாகக் கவலைப்பட வேண்டியதில்லை. முதல் வகுப்பினர், புகையிலையின் தீங்கினை உணர்ந்ததும், அதாவது தாம் கெட்டுப் போவதுமல்லாமல் பிறருக்கு ஒரு கெட்ட மாதிரியாகவும் தாம் விளங்கக் கூடுமென்பதை யுணர்ந்ததும் தங்கள் பழக்கத்தை விட்டுவிடுவார்கள்.

இரண்டாம் வகுப்பினரும் அனேகமாக முதல் வகுப்பினரைப் போலவே எளிதில் விட்டுவிடக்கூடும். கொஞ்ச காலத்திற்கு ஐந்தாம் நரம்பின் வழக்கமான துருதுருப்பில்லாமைக்காக வருந்தலாம். தலையைச் சொறிவதால், உதட்டைக் கடிப்பதால் அல்லது முகத்தில் ஊறலெடுப்பதால் மூளையிலேற்படும் ஒருவிதமான உணர்ச்சி மாதிரி புகைக்குடி நிறுத்தலாலுமேற்படும். பிசினை மெல்லுவதாலும் புகை குடிப்பது போன்ற உணர்ச்சி தற்காலிகமாக ஏற்படும். அது புகைக் குடியை நிறுத்துவதற்கும் நன்றாக உதவும்.

மூன்றும் வகுப்பினர் உணவு கொண்டபின் அல்லது பகல் வேலை முடிந்த பின் புகை குடிப்பதால் தங்களுடைய தளர்வுணர்ச்சியைப் போக்கிப் பழகியிருப்பர். புகைக் குடியை நிறுத்தவும் அஃதின்மையால் வருந்துவர். குடியை நிறுத்த அவர்களுக்குத் தீவிரமான மன உறுதி வேண்டும். அவர்கள் தற்காலிகமாக அனுபவிக்கும் தீமை தரும் உணர்ச்சியால், பின் எளிதில் நிவர்த்தி செய்துகொள்ள முடியாத சங்கடங்களை அனுபவிக்க வேண்டியதேற்படும் என்னும் உணர்ச்சி அவர்களை உறுத்திக் கொண்டேயிருந்தால்தான் அவர்கள் நிறுத்த முடியும்.

நான்காம் வகுப்பினர் சம்பந்தமாகத்தான் பெரும் போராட்டம் அவசியமாகும்.

புகைக்குடியே யில்லாது போனால் அபின் கஞ்சா தின்கிறவர்கள் அவற்றைத் தின்கிறதற் கில்லாத பொழுது படும் சங்கடமே இவர்களும் படக் கூடும்.

புகையிலையினால் கெட்டுப்போன நரம்புகள் அதாவது அதனை உபயோகித்து வந்த பொழுதெல்லாம் வெறி மயக்கத்தில் விறைப்பாக இருந்து வந்த நரம்புகள் அதனை நிறுத்தவும் துன்புறுத்த ஆரம்பிக்கின்றன. ஆகையால், புகைக் குடிகாரன் ஒருவனை அவன் பிரியம் போல் நிறுத்திக் கொள்ளட்டு மென்றிருந்தால், அவன் நிறுத்தவே மாட்டான்.

புகையிலைக் குடியை நிறுத்துவதற்கு யோசனை சொல்லும் பண்டிதர்கள் அதுபோல நரம்புகளை ஒடுக்குகிற மருந்துகளை உபயோகிக்கச் சொல்லுகின்றனர். அதனால் ஏற்படும் பயன் தற்காலிகமாக இருக்கக் கூடுமேயன்றி, நிரந்தரமாக இருக்கக் கூடியதில்லை. அனேகர் தங்கள் கவனம் சிதறுவதைத் தற்காலிகமாக மாற்ற அல்லது தங்கள் மனதை ஒருமுகப் படுத்த அல்லது ஒரு முடிவிற்கு வருவதற்கவசியமான பல புள்ளி விபரங்களின் சாரத்தைத் தெளியவே புகை குடிக்கின்றனர். ஒருவருக்கு நல்ல சுகமிருக்குமென்றால், இவையெல்லாம் தாமாகவே அமையும். இவற்றிற்காகப் புகைக் குடியின் உதவி வேண்டியதில்லை. புகைக் குடியினாலும் அபின் கஞ்சா முதலியவற்றைத் தின்பதினாலும் நம்முடம்பு பல வகையிலும் கெட்டே போகிறது. அந்தக் கேட்டின் கடுமையை மறக்கவே, அவற்றின் பின் பழக்கம் நமக்குதவுகிறது. அவற்றினால் நம்முடம்பிற்கு நேரிட்டிருக்கும் கேட்டை நீக்கினாலன்றி அவற்றை நிறுத்திக்கொள்ளுவது சாத்தியமாகாது. தூக்கமின்மை, நல்ல தூக்கம் வாராமை, செரியாமை, மலச்சிக்கல், கடுங் களைப்பு, ஊட்டமின்மை, தேகாப்பியாசம் செய்யப் பிரியமில்லாமை இவை யத்தனையும் மாறவேண்டும்.

முதலாவதாகப் புகையிலைக் குடியை நிறுத்தி விடுவதென்ற முடிவைப் பூரணமாகவும் தெளிவாகவும் செய்துகொள்ள வேண்டும். புகையிலை ஒரு பெரும் சக்தி வாய்ந்த எதிரி யென்றும் அதனைத் துணிகரமாகவும் விடாப் பிடியாகவும் எதிர்த்துப் போராடி ஒழிக்க வேண்டுமென்றும் உணரவேண்டும். நீண்ட நாள் அதற்கடிமையாகி விட்டதால், அது மனோ திடத்தையும் அழித்திருக்கும்; என்றாலும், பக்க பலம் தேடி அதனை யொழித்திட வேண்டும்.

நீண்ட நாளாகப் புகை குடித்து வந்தவன் புகை குடியாதிருப்பது தன்னைத் துன்புறுத்தவும் திரும்பவும் புகை குடிக்க விரும்பலாம். என்றாலும், அந்தப் பிசாசுக்கு அவன் மீண்டும் இடங்கொடுப்பதா யிருந்தால் அஃது அவனுடைய உயிரையே யொழித்து விடும் என்ற பயமும் அவனுக்குத் தோன்றிக் கொண்டிருக்க வேண்டும். அதனை அடக்கியாள, கொஞ்சங் கொஞ்சமாகப் பலத்தைச் சேகரித்தும் வர வேண்டும்.

புகைக் குடியை நிறுத்தியவுடன் தன் உயிருக்கே ஆபத்து வந்துவிட்டது போலவும் திரும்ப அதனை ஆரம்பித்தாலன்றி அப்படியே நேர்ந்து விடும் போலவும் தோன்றும். ஆனால், அப்படி ஆபத்தொன்றும் நேர்ந்து விடாது. நரம்புகள் சாதாரண நிலைமைக்கு வர வர அந்தத் தோற்றமுமில்லாது குறைந்து ஒழிந்து போகும். புகைக் குடியை நிறுத்துகிறவன் புகையிலையில் பத்தொன்பது வகை நஞ்சுகளிருப்பதையும் அவை தன் உடம்பைப் பாழாக்கி வந்திருக்கிற வகையையும் தெரிய வேண்டும். அவற்றை அடிக்கடி ஞாபகப் படுத்தியும் வர வேண்டும். அவன், தன் மூளையைக் குலையைக் குருதிக்குழாய்களைக் கல்லீரலை, சிறு நீர்ப் பிரித்தியை மற்றும் தன்னுடம்பின் ஒவ்வொரு பாகத்தையும், அஃது எப்படிக் கெடுத்திருக்கிற தென்பதையும் நினைவு கூர்ந்து வரவேண்டும்.

இரண்டாவது யோசனை: கொஞ்ச காலத்திற்காவது முயற்சியையும் அக்கம் பக்கத்தையும் மாற்றவேண்டும். புகைக் குடிப்பழக்கத்தை மறக்கக் கூடிய நிலைமையிலிருந்து வர

வேண்டும். புகைக் குடிகாரர் பழக்கமும் புகையிலைச் சுருட்டுகள் சிகரெட்டுகள் முதலியனவும் தீப்பெட்டியும் மற்றும் புகைக் குடியை ஞாபகப் படுத்தக் கூடிய எதுவும் அவனுக்குப் பக்கத்திலிருக்கக் கூடாது. புகைக் குடியில்லாதவர்களுடன் நடந்தோ மோட்டாரிலோ வெளியே போய்வருவதும் ஆறு மலை கடல் பக்கமாகப் போய்ச் சுற்றிவருவதும் தன் மனதை வேறு வகையாகச் செலுத்தவும் உடம்பிற்குப் புத்துயிர் தந்து புதுச் சத்தியை வளர்க்கவும் நரம்புகளைத் தூண்டித் திரும்பவும் குடிக்கச் செய்யாது மறக்கச் செய்வதுமான பல காரியங்களில் மனதைச் செலுத்தி வரவேண்டும்.

மூன்றுவது யோசனை: புகையிலையை மட்டுமல்ல, மற்றும் வெறிக்குடிப் பொருள்களையும் தள்ளவேண்டும். வெறிக் குடியும் புகைக் குடியும் நம்முடம்பை அடிமைப் படுத்துவதிலும் கெடுப்பதிலும் ஒன்றுக்கொன்று ஆதரவாக இருக்கின்றன. வெறிக்குடி குருதிக் குழாய்களை விரிக்கும்; புகைக்குடி அவற்றைச் சுருக்கும். இப்படியாக, ஒன்று மற்றொன்றுக்கு மாற்றுப்போல இருந்து மற்றதை விரும்பவும் தூண்டும். இரண்டில் ஒன்றை மட்டும் விடுவதும் சிரமப்படும்.

நான்காவது யோசனை: காரமான பொருள்களையும் பானங்களையும் ஒழிக்கவேண்டும். கடுகு, மிளகு, மிளகு இரசம், இஞ்சி, சாதிக்காய், சாதிபத்திரி, கிராம்பு இவற்றை யெல்லாம் நீக்கவேண்டும். இவை நரம்புகளை விறைக்கச் செய்யும்; அந்தப் பிடிப்பை நீக்க வெறிப் பானங்களையும் குடிக்கத் தூண்டும். மாமிச உணவையுங் கூட நீக்கவேண்டும். மாமிசத்திலுள்ள உவரிக் காடியும் நரம்புகளை விறைக்கச் செய்யும். தே நீரும் காப்பியும் அவசியம் நீக்கப்பட வேண்டும். அவற்றிலுள்ள கபினி நஞ்சாலும் (Caffeine) நரம்புகள் கெட்டுப் போகும்.

ஐந்தாவது யோசனை: சில உணவுப் பொருள்கள் புகையிலைக்குப் பகையாகவே இருக்கின்றன. தானியங்களிலும் உருளைக்கிழங்கிலும் பழங்களிலுமுள்ள மாச்சத்தும் சருக்கரையும் புகையிலைக்குப் பகையாகும்; பாலும் அப்படியே. பழங்கள் தின்பவர்களும் பால் நிரம்பக் குடிப்பவர்களும் சீக்கிரமாகப் புகையிலையை மறந்துவிடக் கூடும்.

ஆறுவது யோசனை: நம்முடம்பின் உயிர்ச் சத்துக் குறைவு, நரம்பழற்சிக்கு (Nerve irritability) முக்கிய காரணமாக இருக்கலாம். அதற்காக, புகையிலையையேனும் அபின் கஞ்சாவையேனும் உபயோகிப்பது சரியில்லை; உயிர்ச்சத்து நிறைந்த பசளைக் கீரையையும் பார்சிலிக் கீரை (Parsley) முதலியவற்றையும் அதிகமாகச் சேர்த்து வருவதே புத்திசாலித்தனமாகும்.

ஏழாவது யோசனை: புகை குடித்து வந்தவர்கள் புகைக் குடியை நிறுத்தவும் தூக்கம் வராமல் சங்கடப்படலாம். அவர்கள் பதினைந்து முதல் முப்பது நிமிடங்களோ அதற்கு மதிகமான நேரமோ நகச்சூடான வெந்நீரில் தங்கள் உடம்பு பூராவையும் முக்கிக்கொண்டிருக்கலாம். இந்த வெந்நீர்க் குளிப்பை நரம்பழற்சியைப் போக்குவதற்கு எந்த நேரத்திலும் உபயோகித்துக் கொள்ளலாம்.

காலையில் குளிர்ந்த நீரில்—தண்ணீரில் குளிப்பதுவும் தளர்ச்சியை நீக்கிப் புத்துயிர் பெறுவதற்கேற்ற சாதனமாகும். அது மூளைக்கும் நரம்புகளுக்கும் வயிறு கல்லீரல் முதலிய முக்கிய உறுப்புக்களுக்கும் நல்ல திடத்தையும் சுகத்தையும் தரும்.

எட்டாவது யோசனை: தண்ணீரைத் தாராளமாகக் குடித்து வருவதும் நல்லது. அது வெந்நீராகவுமிருக்கலாம். ஒரு நாளைக்குச் சுமார் இரண்டுபடி தண்ணீர் வரை குடிக்க வேண்டும். குடிப்பது பனி நீராக (Ice water) இருப்பின் அதனை வாயில் வைத்து உறிஞ்சிக் குடிக்கவேண்டும். ஆரஞ்சு, தக்காளி முதலிய பழச் சாறுகளை, தண்ணீருக்குப் பதிலாகக் குடிப்பதால், மிகுந்த நன்மையே உண்டாகும்.

புகையிலைக்கு மாற்று மருந்துகளும், புகையிலையைப்போல் கேடு விளைவிப்பனவே;

ஆகையால் மாற்று மருந்துகளை உபயோகித்த லுங் கூடாது. வெள்ளிக் காலகையை (Silver Nitrate) ஒரு அவுணத் தண்ணீரில் இரண்டு மூன்று தானிய மணி (Grain) அளவு கரைத்து, புகையிலை இச்சை தோன்றும் பொழுதெல்லாம் அதனை வாயில் விட்டுக் கொப் பளித்தால் அந்த இச்சையைக் குறைக்கும்; என்றாலும், அதனை அறவே யொழித்து விடாது. திரும்பத் திரும்ப அந்த இச்சை தோன்றும் பொழுதெல்லாம் ஒரு கரண்டி வெள்ளிக் காலகைக் கரையத்தை (Solution) வாயில் ஊற்றிக் கொப்பளிக்கலாம். மனதை யும் உடம்பையும் அதனை மறக்கும் வழியில் திருப்பவும் வேண்டும். ஒரு தானிய மணி (Grain) யில் நூற்றிலொரு பங்கு வெள்ளிக் காலகையைச் சருக்கரையில் பொதிந்து மாத் திரை (Capsule) களாகச் செய்து வைத்துக் கொண்டும் அந்த இச்சை தோன்றும் பொழு தெல்லாம் ஒவ்வொரு மாத்திரையை வாயில் போட்டுச் சுவைத்து விழுங்கிவரலாம். இப்படி யாக, மன வுறுதியும் சேர்ந்தாலே புகைக் குடியை அறவே நிறுத்திவிட முடியும்.

The Social Welfare.

ஆ. நாட்டுவைத்தியம் மிருகவாகடம் பாகமுறை வாழ்க்கைக் குறிப்புக்கள்.

I புகையிலை

மருந்தை முறித்துவிடும் வாய்வறளச் செய்யும்
திருந்து பலவீனஞ் சேர்க்கும்—பொருந்துபித்தம்
உண்டாக்கும் விந்தழிக்கும் ஓது புகையிலையைக்
கண்டார்க்கும் ஆகாது காண்.

அகத்தியர் குணவாகடம்.

மருந்தை முறித்துவிடும்; வாயை வறளச்செய் யும்; பலவீனம் சேர்க்கும்; பித்தம் உண்டாக்கும்; விந்தை யழிக்கும். புகையிலையைக் கண்ணாலும் காணலாகாது.

II 1. நூறு பலம் எடையுள்ள உலர் ந்த புகையிலையில் இரண்டு பலம் எடையுள்ள நிகொடீன் என்று சொல்லப்படும் கொடிய விட மிருக்கிறது. நிகொடீன் என்னும் விடம் அரளி வேரைக் காட்டிலும் மிகக் கொடியது. ஒரு சொட்டு நிகொடீனை ஒரு முயல் மேலே வைத் தால் அந்த முயல் செத்துப்போம். பூனை அல் லது நாயின் நாக்கில் இரண்டு சொட்டு விட் டால் போதும், அது உடனே இறந்துபோம்.

ஓர் அமெரிக்க சங்கம்.

2. கபினி தான் மக்களைக் காப்பியையும் தேநீரையும் விரும்பிக் குடிக்கச் செய்வது. இந்த மருந்துச் சரக்குத்தான் நரம்புகளைப் பாதித்து, மேற்படி பானங்களின் மேலே பித்துக்கொள் ளச் செய்வது. இந்த மருந்துச் சரக்குத்தான் ஒரு தடவை குடித்த பானத்தின் கிளர்ச்சி அடங்கிப்போன பின்பு, மறுபடியும் அதனைக் குடிக்கச் செய்வது. இந்த மருந்துச் சரக்குத் தான் தலைவலி நீடித்திருந்தும், அது இருக் கிறதென்று தெரியாதபடி செய்வது.

George E. Conforth.

3. ஒரு இராத்தல் தேயிலையில் 2520 சுண்டெலிகளையோ, 45 முயல்களையோ, 42 பூனை களையோ, 16 நாய்க்குட்டிகளையோ கொல்லு வதற்குப் போதிய கபினி இருக்கிறது.

சுக விரோதிகள்.

4. நான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கும் காரணங்களைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். சில காலமாக நமது பிள்ளை களுங்கூட விலை சரசமான விதேசிச் சிகரெட்டு களை வாங்கிப் புகைக்க ஆரம்பித்து விட்டார் கள். இப்பழக்கம் நம்முடைய தேசத்தை சீனா, இந்தியா போன்ற தேசங்களின் பரிதாப நிலைமைக்குக் கொண்டு வந்து விடுமென்று நான் அஞ்சுகிறேன். ஏனெனில் அபினைப் போலவே, புகையிலையிலும் மயக்கந் தரும் நஞ்சுகள் இருக்கின்றன. இந் நஞ்சுகள் மாண வர்களின் மனோ வலிமையைக் குறைத்து, நரம்புகளை உணர்வற்றுப் போகச் செய்கின் றன. இவ்விதமாய் நம்முடைய தேச ஒழுக்க

முறைமைக்கே பங்க முண்டாகும். ஆகவே, இளைஞர்களும் வாலிபர்களும் சிகரெட்டு பிடிக்கவே கூடாதென்று நாம் பலவந்தமாய்த் தடுக்க வேண்டும். நாம் நம்முடைய தேசத்தை ஐரோப்பிய அமெரிக்க தேசங்களினும் சிறந்ததாகச் செய்ய விரும்பினுல், நாளை நமது தேசத்தின் தாய் தந்தையராகும் சிறுவர் சிறுமிகளை சிகரெட் பிடிக்க இடங் கொடுக்கவே கூடாது. (திரு. கிமிட்டோ சுருட்டுப் பிடிப்பதைச் சட்ட விரோதமாக்கிய மசோதாவை யாதரித்துப் பேசிய பேச்சு. இந்தச் சட்டம் சப்பானில் இப்பொழுதும் அமுலிலிருக்கிறது).

சுக விரோதிகள்.

5. பதினாறு வயதுக்குட் பட்ட பையன்கள் புகை குடிக்கக் கூடாதென்று ஐதராபாத் நைசாம் சட்டமும் இயற்றி வைத்திருக்கிறார்.

சுக விரோதிகள்.

6. பச்சை மிளகாய் வற்றல்:

பருத்து நீண்ட இளம் பச்சை மிளகாய் 1 வீசை அல்லது ½ வீசை வாங்கி, நன்ருகக் கழுவி, காம்பின் பாதியைக் கிள்ளிவிட்டு அதின் நுனியிலிருந்து நீள வட்டமாகக் கொஞ்சம் பிளந்து ஒரு முறத்தில் போட்டு உலர்த்திக் காய்ந்தபின், தயிர் ⅛ படி உப்பு காயம் இம் மூன்றையும் ஒரு வாயகன்ற ஈயம் பூசின பாத்திரம் அல்லது கல் மரவையில் கொட்டிக் கரைத்து, உலர்த்தின மிளகாயை அதில் கொட்டி ஊறவைக்கவேண்டும். இரண்டு நாட் கழித்து வெய்யிலில் உலர்த்தவேண்டியது. இன்னும் தயிர் இருந்தால் மறுபடியும் ஊற வைத்து வெய்யிலில் உலர்த்தி வற்றல் ஆன பின்பு பத்திரப்படுத்த வேண்டியது. பின், எண்ணெய்யில் வறுக்கலாம்.

(வித்தியாதனம்) Jane Fenn.

7. உழவுத் தொழிலுக்கு ஊக்கந்தருவன யாவை? கால் நடைகளே யன்றோ! அதற்கெனத் தனிப் பொங்கலும் இட்டுத் தமிழ் நாட்டார் அதன் பெருமையைப் போற்றுகின்றனர். எனினும் நம் நாட்டவர் மாடுகளை நன்ருகப் போற்றவில்லை யெனும் பெருங் குறை ஒன்று இருந்துதான் வருகிறது. அளவுக்கு அதிகமான பயனை அவற்றின் மூலம் பெற்று அவற்றிற்கு ஏற்ற உணவு அளிக்காது வாட்டுகின்றனர். எக்காலத்தும், அவற்றைப் பாதுகாக்காவிடின் நாட்டு மக்கள் அதிலும் உழவர்கள் அடையும் பயன் ஒன்றுமில்லை என அறிந்திருந்தும், அவற்றினிடத்து நோக்கம் வைக்காதிருத்தல் இரங்கத்தக்கதே.

"நெஞ்சில் உரமு மின்றி நேர்மைத் திறனுமின்றி
வஞ்சனை செய்வாரடி—கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி"

என்று பாரதியார் கூறியபடி நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் வாய்ப் பேச்சிலேயே காரியங்களைச் சாதிக்கும் கருத்தராக இருக்கின்றனர். எதற்கும் நேர்மையும் அதற்கு ஏற்ற மனத்திடமும் வேண்டியது அவசியமாகும். ஆனல், அவ்வாறு உள்ளவர் நம் நாட்டில் விரலில் எண்ணக்கூடியவரேயாகும்.

தமிழணங்கு.

---

8. கிராமவாசிகள் : விபசாயிகள்.

பயிரிடுபவரின் வறுமை

CHOWDRY MUKHTAR SINGH

(சாரம் IX)

கிராமங்களில் கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்கள்.

கடன் வாங்கும் பழக்கம் ஞாபகத்துக் கெட்டாத காலமுதல் இருந்தே வருகிறது. செழிப்பான நாடுகளிலும் கடன் வாங்கவே செய்கிறார்கள். திரும்பச் சொன்னல், அங்கு தான் அதிகமாகக் கூடக் கடன் வாங்குகிறார்கள். கடன் வாங்குவதே பிசகென்று சொல்லி விட முடியாது. வாங்கும் கடனுக்காகக் கொடுக்கும் வட்டியும் அதனை வசூலிக்கும் முறையுமே

ஒரு நாட்டைப் பணக்கார நாடாகவோ எளிய நாடாகவோ ஆக்குவன. செழித்த நாடுகளில், குறைந்த வட்டிக்கு எளிதாகவும் கடன் வாங்கப்படுகிறது. சொற்ப முதலே வைத்துக்கொண்டும், பெரிய வியாபாரமோ முயற்சியோ செய்யப்படுகிறது. எளிய நாடுகளின் உயர்ந்த வட்டித் தாரணையே, முதலையும் சொற்ப காலத்திற்குள் விழுங்கிவிடுகிறது. முற்காலத்தில், சாதாரணமாக அறுவடை காலத்தில் கடன்கள் தீர்க்கப்படும். கடன் கொடுத்தவன் கெட்டுப்போகாமலும் கடன் வாங்கினவனும் கடன் கொடுத்தவனை மோசம் செய்திடாமலும் கிராமப் பஞ்சாயத்தே கவனித்துக்கொள்ளும். விளைவு குறைவா யிருந்தால், கடனின் ஒரு பாகமே திருப்பிக் கொடுக்கப்படும். முற்கால வட்டி இப்போதைய வட்டிக்குக் குறைவாக இருந்ததில்லை. சாதாரணமாக, நூற்றுக்கு மாதம் இரண்டு வட்டியாக இருந்துவந்திருக்கிறது. என்றாலும், கடனைத் திருப்பிக் கொடுப்பதால் கடன் வாங்கியவனும் பட்டினி யிருக்கும்படியாக நேர்ந்ததில்லை. கடன் கொடுத்தவனும் கடன் வாங்கியவனின் உழைப்பை வைத்தே பிழைத்ததில்லை. இரண்டு வட்டி சாதாரணமாக இருப்பினும் அப்படியே வசூல் செய்யப்பட்டு வந்ததென்றும் சொல்ல முடியாது. அசல் ரூ. 200-ம் வட்டி ரூ. 25-ம் கொடுக்க வேண்டியவனிடம் ரூ. 210 பெறுமான நாலு மாடுகளிருந்தால், அவற்றையே ரூ. 225 விலை போட்டெடுத்துக் கொள்ளச் சொல்லுவார்கள். அந்தக் காலத்தில் நிலத்திற்கும் விலை அதிகமாக இருந்ததில்லை. ஆகையால், கடன் கொடுத்தவனும் நிலத்தை நம்பியிருந்ததில்லை. அந்தக் காலத்தில், சாதாரணமாகக் கடன் முறிகள் (Documents) எழுதிக் கொண்டதுமில்லை. கடன் வாங்கியவன் கடன் வாங்கவில்லையென்று சொல்லியதுமில்லை.

சுதேச அரசாங்கங்கள் கடனை வசூல் செய்துதர ஒருவிதமான உதவியும் செய்து வந்ததில்லை. அதனால் கொடுக்கல் வாங்கல் காரியங்கள் கெட்டுப் போயிருக்கவு மில்லை. கடன் கொடுக்கிறவனும் வெகு கவனமாகக் கொடுத்து வந்திருக்கிறான். கடன் வாங்குகிறவனும் நாணயத்தைக் காப்பாற்றுவதில் வெகு சிரத்தையோ டிருந்திருக்கிறான். கடன் வாங்கியவன், கடனைத் தானே தீர்க்க முடியாது போனாலும், அவன் பிள்ளைகளும் பேரப் பிள்ளைகளும் கடனைத் தீர்க்காது போனால், தங்கள் குடும்பத்திற்கே கேவலமென்று தீர்த்து வந்திருக்கிறார்கள்.

கொடுக்கல் வாங்கல் செய்கிறவர்களுக்கு அவர்களுடைய கிராமத்தில் மரியாதை உண்டென்றாலும், அவர்களை ஊருக்கே பெரியவர்களாகக் கொண்டிருந்ததில்லை. என்றாலும், அவர்களுக்கு நாட்டாண்மைக் காரர்களும் காரியக் காரர்களும் ஆதரவாயிருந்து வந்தார்கள். அவர்களுக் கேதேனும் ஆபத்து வந்தால், அது தங்களுக்கு வந்தது போலவே தங்கள் உயிரையும் பெரிதாக நினையாது அவர்களுக் குதவி வந்தார்கள். அவர்களும் அதே மாதிரியாகவே கிராமத்தில் விளைவில்லை யென்றால், தங்கள் களஞ்சியங்களைத் தாராளமாகத் திறந்து கிராமத்தார்களுக் குதவி வந்தார்கள். முற்காலத்தில், கையில் பணம் வைத்துக் கொண்டு பணம் கொடுப்பதற்கில்லை யென்று சொல்ல பாப்பர் கோர்ட்டுகளும் இருந்ததில்லை. வாங்கின கடனை ஒருவனால் கொடுக்க முடியாத பொழுது அவனைத் தொந்தரவு செய்ததுமில்லை. முற்காலத்தில் பணத்திற்காக ஒரு மரியாதை இருக்கவுமில்லை; எளிமையைக் கேவலமாக நினைக்கவுமில்லை. பணக்காரர்கள் பிறர்க் குதவியாகவே வாழ்ந்து வந்தார்கள்; தங்கள் இலாபத்திற்காகப் பிறரைச் சூறையாடியதுமில்லை; அடிமைப் படுத்தியதுமில்லை.

(தொடரும்)

கடன் வாங்கிக் கடன் கொடுப்பதும் மரமேறிக் கைவிடுவதும் ஒன்றுதான்.

9. கதை: சரித்திரம்:

தன் வினை தன்னைச் சுடும்

ஒரு குயவனும் வண்ணானும் அடுத்தடுத்த வீடுகளில் குடி இருந்தார்கள். ஆனால் அவர்களிருவருக்கும் எப்பொழுதும் சண்டைதான். வண்ணான் நன்றாய் இருந்தால், குயவனுக்குப் பிடிக்காது. குயவன் நன்றாய் இருந்தால், வண்ணானுக்குப் பிடிக்காது.

ஒரு நாள் குயவன் அவ்வூர் அரசரிடம் போய், "மகாராசாவே, உங்களிடம் இருக்கும் கறுப்பு யானையை வெள்ளையாக்குவதற்கு ஒரு சுலபமான முறை இருக்கிறது" என்று இணக்கமான முறையில் சொன்னான்.

அரசருக்கு அதிக காலமாக ஒரு வெள்ளை யானை வாங்கவேண்டுமென்ற ஆசை இருந்தது. ஆனால், அப்படிப்பட்ட யானை கிடைக்கவில்லை. ஆகவே, தமது கறுப்பு யானையையே வெள்ளையாக்கக் கூடுமானால், அப்படிச்செய்ய அவருக்கு அதிக ஆசை.

அரசர், "அம் முறையைச் சொல்லு பார்ப்போம்" என்றார்.

குயவன், "மகாராசாவே, அஃதொன்றும் சிரமமில்லை. வண்ணார்களுடைய தொழிலே வெள்ளையாக்குவது தானே. என் பக்கத்து வீட்டு வண்ணானிடம் பட்டத்து யானையைக் கொடுத்து வெளுத்துத்தரச் சொன்னால் காரியம் முடிந்து போகும்" என்றான்.

மறுநாள் அரசர் அந்த வண்ணானைக் கூப்பிட்டுத் தனது யானையை வெளுத்துத் தரும்படி கட்டளையிட்டார்.

வண்ணானால் அரசர் கட்டளையை மீற முடியுமா? ஒன்றும் பேசாமல் அவன் வீடுவந்து சேர்ந்தான்.

அரசர் சொன்னபடி செய்யாவிட்டால் அவன் தலைபோய்விடும். இரவு முழுவதும் அவன் தூங்கவே இல்லை. இந்தச் சங்கடங்களுக்கெல்லாம் காரணம் குயவனே என்றும் ஒருவாறு யூகித்துத் தெரிந்து கொண்டான்.

விடியற்காலத்தில், அரசருடைய பாகன் யானையைக் கொண்டுவந்து, வண்ணான் வீட்டு முற்றத்தில் கட்டினான். இதைப் பார்த்துக்கொண்டிருந்த குயவனுக்கு பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. வண்ணானால் யானையை வெளுக்க முடியாது என்று அவனுக்குத் தெரியும். ஆகையால், 'அரசர் அவனைத் தண்டிப்பார்' என்பதை நினைக்க நினைக்க அவனுக்குச் சொல்லமுடியாத குதூகலம் பொங்கிற்று.

வண்ணானோ, என்ன செய்வதென்று தெரியாமல், வீட்டிலேயே இருந்தான்.

அரசர் இதைக் கேள்விப்பட்டு, அதிகக் கோபப்பட்டார். வண்ணானை அழைத்துவரச் சொல்லிக் காரணத்தைக் கேட்டார்.

வண்ணான் நடுநடுங்கி மிகவும் வணக்கத்துடன் சொன்னதாவது, "மகாராசாவே பட்டத்து யானையை வெளுத்துத்தர எனக்கு ஒரே ஒரு உதவி செய்ய வேண்டும். யானையைக் கொள்ளும்படியான வெள்ளாவிப் பானை என்னிடமில்லை. அஃதிருந்தால், மகாராசாவினுடைய விருப்பம் நாளைக்கே பூர்த்தியாகி விடும்" என்றான்.

அரசருக்கு இது ஒரு சிரமமான காரியமாகத் தோன்றவில்லை. இப்பொழுது அரசர் கட்டளை குயவனுக்கு வந்தது. பட்டத்து யானையைக் கொள்ளும்படியான ஒரு வெள்ளாவிப் பானையைச் செய்து வண்ணானுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கட்டளை குயவனுக்குக் கொடுக்கப்பட்டது.

அன்றிரவு, வண்ணான் நன்றாய்த் தூங்கினான். குயவனுக்கோ, தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான்.

அடுத்த நாள் மிகவும் சிரமப்பட்டு ஒரு பெரிய பானையைச் செய்ய ஆரம்பித்தான். நூறு வண்டி மண் அதற்கு வேண்டியதாயிரு

தது. சரியாய் ஒரு மாதம் பிடித்தது, அப்பானை செய்து முடிக்க.

கடைசியாக அதை வண்ணனிடம் கொடுத்தான். ஆனால், யானை அதனுள் காலெடுத்து வைத்தவுடனே, பானை சுள்ளுச் சுள்ளாக உடைந்து போயிற்று. ஆகையால், குயவன் இன்னொரு பானை செய்யவேண்டியதாயிற்று. இப்படியாக அநேக பானைகள் செய்தும் எல்லாம், யானை உள்ளே இறங்கினவுடனே உடைந்து போயின. அநேக மாதங்கள் சென்றன.

தகுந்த பானையைக் குயவன் செய்து கொடுக்க முடியாததால், அரசருடைய யானையை வெளுக்க முடியவில்லை என்று வண்ணன் அரசரிடத்தில் முறையிட்டான்.

அரசருக்குக் குயவனின் மேல் வந்த கோபத்திற்கு அளவில்லை. அப்படிப்பட்ட குயவனே, தமது இராச்சியத்தி லிருக்கக் கூடாது என்று அவனை விரட்டிவிட்டார்.

வித்தியாதனம் J. John Dorairaj.

---

10. கைத்தொழில்: குடிசைத்தொழில்

பொருளாதார விருத்திக்கான சௌகரியங்களைப் பற்றிய குறிப்பு

L. B. Green, Director of Industries and Commerce, Madras.

(சாரம் VII)

எண்ணெய் வித்துக்களும் அவற்றினின்றும் செய்யக்கூடிய பொருள்களும்.

பல வேறு வகை எண்ணெய் வித்துக்களும் நம் மாகாணத்தில் விளைகின்றன; அவை நிரம்பவும் விளைகின்றன. அவற்றின் ஒரு சிறு பாகமே எண்ணெயாக்கப்படுகிறது. பெரும் பாகம் வித்துக்களாகவே அயல் நாடுகளுக்கு அனுப்பிக்கப்படுகின்றன. நம் மாகாணத்திலேயே அவற்றை எண்ணெயும் பிண்ணாக்குமாக்காமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதனால் நமக்குமிகுந்த பொருட்கேடும் விளைகிறது. அப்படி அனுப்பிப்பதால் கால்நடைக் குணவாகவும் நிலங்களுக் குரமாகவும் உதவக்கூடிய பிண்ணாக்கையும் இழந்துவிடுகிறோம். எண்ணெயாக்கும் முயற்சியையும் இழந்து போகிறோம். அனேக சந்தர்ப்பங்களில் நிலக்கடலை எண்ணெய்யை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யக் கூடாதாவென ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னையிலிருந்து இதுவரை இரங்கூன் கௌலாலம்பூர் சிங்கப்பூர் இவ்விடங்களுக்கு ஏற்றுமதி செய்து வந்த போதிலும் ஐரோப்பாவுக்கனுப்பச் சாத்தியப் படவில்லை. நம்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் துறைமுகங்களிலும் பெரிய எண்ணெய்த் தொட்டிகள் வேண்டும்; கப்பலிலும் அதற்கான சௌகரியங்கள் வேண்டும். நம் மாகாணத்தின் எண்ணெய் ஆட்டும் தொழிலைப் பற்றி விசாரணை செய்யும்படியாக அரசாங்கம் சமீபத்தில் ஓர் ஏற்பாடு செய்திருக்கிறது. அந்த விசாரணை முடிந்த பிறகு பொதுவாக எல்லா எண்ணெய்களையும் விசேடமாக நிலக்கடலை எண்ணெய்யையும் ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்ய முடியாதா என்பதைப்பற்றி விசாரிக்கப்படும். இப்பொழுதுள்ள எண்ணெய்ச் செக்குகள் தேவைக்கும் அதிகமாக ஆட்டக்கூடியனவாக இருக்கின்றன. ஆகையால், எண்ணெய்ச் செக்குகள் பூராவும் உபயோகிக்கப்படாமலும் இருக்கின்றன. எண்ணெய்களிலிருந்து நெய்யும் உண்டுபண்ணலாம். அவற்றின் நாற்றத்தைப்போக்கிச் சுத்திசெய்து உணவிற் குதவக்கூடியதாகவு மாக்கலாம். கடினமாக்கப்பட்ட கொழுப்புக்கள் (Hardened fats) இப்பொழுது நெய்க்குப் பதிலாகவும் குளிப்புச் சவர்க்காரம் செய்யவும் உபயோகப்

படுத்தப்படுகின்றன. இப்பொழுது உயர்ந்த தரக் குளிப்புச் சவர்க்காரங்கள் செய்ய மிருகக் கொழுப்பே வெகுவாக வேண்டியிருக்கிறது. நம் மாகாணப் பிரதேசத்தில் கிடைக்கும் மிருகக் கொழுப்பே வெகுவாகவேண்டியிருக்கிறது. நம் மாகாணப் பிரதேசத்தில் கிடைக்கும்மிருகக் கொழுப்பு நல்ல தரமாகவுமில்லை; போதியனவாகவும் கிடைப்பதில்லை; தவறுமலும் கிடைப்பதில்லை; அவற்றைச் சுத்தி செய்வதிலும் பெரும் பாகம் வீணே கழிகிறது. ஆஸ்திரேலியாவிலும் மற்றும் நாடுகளிலுமிருந்து இறக்குமதியாகும் மிருகக் கொழுப்பு அதிகக்கிரயமாகிறது. அப்படி அதிகக் கிரயம் கொடுத்து அதனை வாங்கி உயர்தர சவர்க்காரங்கள் செய்கிறவர்கள் வெளிநாடுகளில் சவர்க்காரம் செய்கிறவர்களோடு போட்டி போடவும் முடியவில்லை. மிருகக் கொழுப்புக்குப் பதிலாக எண்ணெய்களிலிருந்தே உண்டுபண்ணிக் கொள்ளக்கூடுமானல், அது திட்டமாகவும் சௌக்கியமாகவும் கிடைக்கவும் செய்யுமானல், குளிப்புச் சவர்க்காரம் செய்யும் முயற்சி நம மாகாணத்தில் விருத்தியாகவும் செய்து வர முடியும். எண்ணெய்களில் நீரகம் ஏற்றி (Hydrogenation) அவை நெய்யாகவும் வெண்ணெய் யாகவும் கட்டியாக்கப் படுகின்றன; அவை பார்வைக்கு வெள்ளையாகவுமிருக்கின்றன; அவற்றில் நாற்றமுமிருப்பதில்லை. சுத்தமான நெய்யாக உபயோகிப்பதற்கில்லாத பொழுது மற்றதை உபயோகிக்கிறதைக் காட்டிலும் இதனை உபயோகிப்பது நல்லது. எண்ணெய்களின் நாற்றத்தைப் போக்கிச் சுத்தி செய்யும் வேலை கேரளச் சவர்க்காரத் தொழிற்சாலையில் செய்துவரப் படுகிறது. விளக்கெண்ணெய்யையும் அப்படியே வைத்தியத்திற்காகச் சுத்திசெய்யக் கூடுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. எண்ணெய்யிலிருந்து குளிப்புக்குதவக் கூடிய உறைகட்டிகளும் (Creams) கூந்தல் தைலங்களும் பற்பொடிகளும் தொழிற் சாலையில் செய்யக் கூடிய மாதிரி அதிகமாகச் செய்து பார்க்க கேரள சவர்க்காரத் தொழிற் சாலை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சோதனைகளின் நோக்கம் இந்தச் செய்பொருள்கள் நன்றாக விலையாகுமா? என்பதைப் பார்ப்பதற்கேயாகும். இந்தச் சோதனைகள் திருப்திகரமாக முடியுமென்றால், இவற்றை வியாபாரப் பொருள்களாகச் செய்து முடிக்கவும் உத்தேசித்திருக்கிறது. அது சாத்தியமாகிற பொழுது சில விளைபொருள்கள் அதிகமாகவும் செலவாகக் கூடும். சில சில சிறு புதுத் தொழில்களும் துவங்கக் கூடும். சிலருக்குப் புதிதாக வேலையும் அமையும். வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் வாசனைப் பூச்சுப் பொருள்களின் (Cosmetics) வரத்தும் குறையும். கேரளத் தொழிற்சாலையில் செய்கிற வியாபாரப் பொருள்களும் அங்கே மாணவர்களுக்குக் கொடுத்து வரப்படும் பயிற்சியும் அதிகமாகும். கேரளத் தொழிற் சாலையில் மூலாதார எண்ணெய்கள் (Essential Oils) செய்வதைப் பற்றியும் சோதனைகள் செய்து வரப்படுகின்றன. இந்தச் சோதனைகளின் நோக்கம் மூலாதார எண்ணெய்த் தொழிலை விருத்தி செய்வதும் சவர்க்காரம் செய்வதற்கு வேண்டிய எண்ணெய்களை உதவுவதுமாகும். இப்பொழுது கிராம்பு இஞ்சி இலவங்கப்பட்டை ஓமம் வெட்டிவேர் முதலியவற்றின் சத்து வடித்தெடுக்கப் படுகிறது.

நூல் நூற்றலும் நேசவுத் தொழிலும்.

கடல் மார்க்கமாகவும், நூல்களும் துணிகளும் வந்திறங்குகின்றன; இருப்புப் பாதை வழியாகவும், அவை ஏராளமாக வந்து இறங்குகின்றன. பம்பாய் ஆமதாபாத் ஊர்களிலிருந்து நம் மாகாணத்திற்கு இறக்குமதி யாவதெல்லாம் உயர்ந்த தரத் துணிகளும் சேலைகளுமாக இருக்கின்றன. சட்டைத் துணிகளும் கொஞ்சம் இறங்குகின்றன. நம் நாட்டில் அமெரிக்காவிலிருந்தும் எகிப்திலிருந்தும் பஞ்சு வாங்கி உயர்ந்த தர நூலாக நூற்று உயர்ந்த தரத் துணிகள் நெய்யவும் விரும்புகின்றனர். நம் மாகாணத்தில் கிடைத்துவரும் பஞ்சையும் நம் மாகாணத்தில் செலவாகக் கூடிய நூலையும் துணிகளையும் உத்தேசிக்க, இன்னும் சில இடங்களில் பஞ்சாலைகளேற்படுத்தலாம்.

பாபநாசம் மின்சார வேலை முடியவும் அங்கிருந்தும் பைக்காரா மாதிரி மின்சாரம் சௌகரியமாகவும் பெறலாம். கொடுபட்ட ஜில்லாக்களிலும் (Ceded Districts) நூல் நூற்கும் ஆலை ஒன்றுக்கு மேலும் ஏற்படுத்தலாம். துங்கபத்திராத் திட்டம் வரும்பொழுது அந்தப் பிரதேசத்தில் தண்ணீர் பாய்ச்சி கம்போடியாப் பருத்தியும் சாகுபடி செய்யலாம்; உயர்ந்த தர நூல்களும் நூற்கலாம்; உயர்ந்த தரத் துணிகளும் நெய்யலாம்; அடுத்த சில வருடங்களுக்குள்ளாகவே, நம் நாட்டுப் பஞ்சுக்கு வெளி நாடுகளில் தேவையில்லாது போகக் கூடுமாதலால், நம் நாட்டிலேயே நம் நாட்டுப் பஞ்சையெல்லாம் துணியாக்கிக் கொள்ளுவது நல்லதாகும்.

சருக்கரை.

நம் மாகாணத்தில் கருப்பஞ்சாற்றிலிருந்தும் பதநீரிலிருந்தும் சருக்கரை காய்ச்சும் ஆலைகள் பதின்மூன்று இருக்கின்றன. நம் மாகாணத்தில் செலவாகும் சருக்கரையில் மூன்றிலொரு பாகமே நம் மாகாணத்தில் உண்டாகிறது. சருக்கரை ஆலைக்குப் போதிய அளவு கரும்பு சாகுபடியாகிறதில்லை. சீக்கிரமாக முதிரும் கரும்பும் சாகுபடி செய்யவேண்டும்; நாட்பட்டு முதிரும் கரும்பும் சாகுபடி செய்யவேண்டும்; வருடத்தில் பெரும்பாகம் ஆலைக்கு வேலை தரக்கூடிய அளவும் சாகுபடியாகவேண்டும். நம் மாகாணத்தில் கள் குடி நிறுத்தம் அதிகமாக ஆகப் பதநீரிலிருந்தும் தென்னஞ் சாற்றிலிருந்தும் அதிக வெல்லமும் செய்யலாம்.

நீர்வளம் நிலவளம் பொருந்திய நமது நாட்டில் நமக்கு வேண்டிய சருக்கரையளவுக்கேனும் நாம் கரும்புச் சாகுபடி செய்வதில் மனஞ் செலுத்தாமல் பிற நாட்டாரை எதிர்பார்த்திருப்பது மிகவும் விசனிக்கத்தக்கது. உழவுத்தொழிலில் இன்னும் ஊக்கஞ் செலுத்தினால் உயர்வடையலாம். (தொடரும்)

11. செய்தித் திரட்டு:

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் செய்திகள்

1. வேளாண்மை யாராய்ச்சி முடிவுகளில் உழவருக்கு இலாபகரமா யிருப்பவற்றை அட்டியன்னியில் பரவச்செய்வதற்காகச்சீமைக்கும் வேல்சுக்கும் ஒரு கழகமும் காத்துலந்துக்கு (Scotland) ஒரு கழகமும் விபசாய மந்திரியின் கீழ் வேலை செய்துவர ஏற்பாடாகி வருகிறது.

Indian Farming.

2. சமீபத்தில் மலையாளத்தில் வெள்ளத்தால் மணலடித்துச் சேதமாகியிருக்கும் நிலங்களில் முழுப் புலங்களுக்கும் பதிவு செய்யப்பட்டிருக்கும் முழுப் பாகங்களுக்கும் (Sub-divisions) சாதாரண விதிகளின்படிக்கே தீர்வைக் கழிவு தரப்படும். அப்படிக்கில்லாத நிலங்கள் 10 செண்டுக்கு மேலிருக்குமாகில், அவற்றைத் தனியாக அளந்து சப் டிவிஷன் செய்து தீர்வைக் கழிவு தரப்படும். அப்படி சப் டிவிஷன் செய்வதற்கும் நிலங்களுக்குச் சொந்தக்காரர் யாதொரு கட்டணமும் செலுத்தவேண்டியதில்லை.

Press Note No. 154.

3. அகில இந்திய கண்காட்சி சங்கத்தின் தெற்கு வட்டகை உட்கழகம் அடுத்த சனவரி மாதம் 17உ முதல் 28உ முடியப் பெங்களூரில் ஒருகால் நடைக் கண்காட்சி நடத்தத் தீர்மானித்திருக்கிறது. அதில் பம்பாய் தென்பாகமும் சென்னையும் ஐதராபாத்தும் மைசூரும் மற்றும் தென்னிந்திய சுதேச இராச்சியங்களும் கலந்து கொள்ளுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு அமிர்த மஹால், பர்கூர், ஹியோனி, கள்ளிக்கரை, காங்கயம், கிலரி, கிருட்டிணா பள்ளத்தாக்கு, ஓங்கோல், சிவப்புச் சிந்தி மாடுகளும் நாகப்பூர் முரா எருமைகளும் தக்காணி பல்லாரி அசன்மண்டியா நெல்லூர் ஆடுகளும் மலையாளம் வெள்ளாடுகளும் பார்வைக்கு வரும்.

Mysore Information.

(உரோமம் அடர்ந்த ஆடுகளுக்கு முதற் பரிசு ரூபா 15ம் நன்றாக வளர்க்கப்பட்ட மாடுகளுக்கு முதற் பரிசு ரூபா 100ம் வழங்கப்படுமென்றும் காட்சிக்கு ஏற்றுக்கொள்ளும் இனங்களைச் சார்ந்த நம் மாகாண ஆடு மாடுகளைப் பெங்களூருக்குக் கொண்டுபோய்வர ஏற்படும் செலவை நம் மாகாண அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமென்றும் கூட்டுறவு பத்திரிகை கூறுகிறது.)

4. பர்மாவில் உற்பத்தியாகிற அரிசியையும் பஞ்சையும் பர்மா சர்க்கார் மொத்தமாக வாங்கி ஏற்றுமதி செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள். மலேயா அரசாங்கத்தார் பர்மா அரிசியை நேராக வாங்கி விற்கப் போவதாகத் தெரிகிறது. இதனால் உண்டாகிற இலாபமெல்லாம் பர்மா குடியானவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படும். இது போன்ற ஒரு திட்டம் சென்னை மாகாணத்தில் அமுலுக்கு வந்தால் விவசாயிகளுக்குப் பேருதவியா யிருக்கும். பர்மா அரிசியின் போட்டி இனிமேல் இந்தியாவில் ஏற்படாது என்று நம்புகிறோம்.

கூட்டுறவு.

5. சண்டையின் காரணமாக அனேக இரசாயனப் பொருள்கள் நம் நாட்டில் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. சிறு தொழில்களாகச் செய்யக்கூடியன வற்றை அதாவது கந்தகக் காடி (Sulphuric acid) அதன் உடன் விளைபொருள்கள் (by-products) கண்ணாடித் தகடுகள், கண்ணாடிச் சாமான்கள் பழவெல்லம் (Glucose) கேசின் (Casein) மற்றும் பிசின் போன்ற பொருள்கள் செய்ய ஒரு கம்பெனி நைசாம் இராச்சியத்தில் ஆரம்பிக்க ஏற்பாடாகி வருகிறது. அதன்படி மொத்த விடுமுதலில் ஐம்பது சதமானம் வரை அப்போதைக்கப் போது வேண்டிய அளவு-அதாவது, 'ஆண்டிற்குப் பதினைந்து லட்சத்துக்கு மேல் கொடுப்பதில்லை; மொத்தம் ஐம்பது இலட்சத்துக்கு மேலும் கொடுப்பதில்லை; 'இப்படி ஐம்பது சதமானம் கொடுப்பதும் மற்றும் 50 சதமானம் வசூலான பின் தான்' என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு, உதவ நைசாம் அரசாங்கம் முன் வந்திருக்கிறது. மேலே குறிப்பிட்டவை தவிர்த்து வேறெதேனும் செய்வதென்றாலும் அரசாங்கத்தின் முன் அனுமதி பெற்றுச்செய்யவேண்டும். சண்டை முடிந்து பத்து வருடம் வரை மேலே கண்டபடி செய்து வர வேறெவருக்கும் அனுமதி தரப்படமாட்டாது. நிருவாகத்தில் பாதிப் பேர் அரசாங்கப் பிரதிநிதிகளாக இருப்பர். நிருவாகத்தை நடத்திவரும் காரியக்காரரையும் (The managing agent) அரசாங்கமே நியமித்திருக்கிறது. இந்தக் கம்பெனிக்கு வேண்டிய எந்திரங்கள் வாங்கிவருவதற்காக அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் அரசாங்கப் பிரதிநிதியின் பிரயாணச் செலவு முதலியவற்றின் பாதியை இந்தக் கம்பெனி பொறுத்துக்கொள்ள வேண்டும். சருக்கரைத் தொழிற்சாலையில் 75 சதமானம் இதே அரசாங்கம் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. காகித ஆலையொன்றும் இந்த அரசாங்க ஆதரவில் நடந்து வருகிறது.

H. E. H. Nizam's Dominions P. E. No. 80.

ஆ. கிராமப் புனருத்தாரண தலதாபனச் செய்திகள் தீர்ப்புக்கள்

1. கிராமப் பஞ்சாயத்து மசோதா சம்பந்தமாக, யோசனைகளும் திருத்தங்களும் அக்டோபர் மாதம் 17 உ வரை சொல்லலாமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் காலம் போதியதில்லை யென்று தெரிவதால், நவம்பர் மாதம் 16 உ வரை சொல்லலாமென்று அந்தக் காலத்தை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

Press Communique No. 59.

2. விலை ஏறுது அடக்கிவர (Price control) புது தில்லியில் (New Delhi) கூடிய மாநாட்டில் அரிசி விலை ஏறிவருவதை அந்தந்தப் பிரதேச அல்லது மாகாண அதிகாரிகளே இலேசாகத் தடுத்துக் கொள்ளக் கூடும் என்று நம் இந்திய அரசாங்க வியாபார உறுப்பினர் (Commerce member) பேசியிருக்கிறார். பழைய வரவே யுள்ள குடியானவனுக்கு அரிசி விலையேறுவது தவிர்க்க முடியாத பெருஞ் சங்கடமாக இருக்கிறதும், புது தில்லியிலிருக்கும் பெரிய அதிகாரிகளுக்கு இலேசாகத் தோன்றலாம். அது மட்டுமல்ல, முன்னும் வயிற்றுக்குப் போதிய உணவு கிடையாதிருக்க, இப்பொழுது அதற்கும் மோசம் ஏற்பட்டு வருகிறது. நம்முடைய ஆவலாதியெல்லாம் பிரதேசத்திலோ மாகாணத்திலோ மத்திய அரசாங்கத்திலோ விலை யேறுவதைத் தடுப்பதெல்லாம் மிகவும் தாமதமாகவே நடக்கிறது என்பதே. சிறு வியாபாரியும் தரகனும் எத்தனையோ வழியில் தாங்கள் வாங்கும் விலையை, விலைக்கு வாங்கி உண்பவர்கள் தெரியாதபடியும் செய்து விடுகின்றனர். (சமுசாரிக்கும் நல்ல விலை கிடைக்காமல், இடையிலுள்ளவர்கள், அடித்துக் கொண்டு போகின்றனர். (ப-ர்) எங்கெங்கே அரிசி அதிக இலாபம் வைத்து விற்கப்படுகிறதோ அங்கெல்லாம் அரசாங்கமே கடை வைத்து விற்று வரவேண்டும். அப்படிச் செய்தால்தான் கடை விலை கணக்கில்லாமல் ஏறுவதும் நிற்கும்.

Mail.

3. நம் இந்திய அரசாங்கம் கிராமப் புனருத்தாரணத்துக்காகக் கொடுத்துவரும் உதவித்தொகையிலிருந்து ஐம்பதினாயிர ரூபாவை நம்மாகாண அரசாங்கம் கால்நடை அபிவிருத்தி நிதிக்கு மூல முதலாக ஒதுக்கிக் கொள்வதென்றும் கீழே கண்ட திட்டத்தை நிறைவேற்றி வைப்பதென்றும் தீர்மானம் செய்திருக்கிறது.

மாகாணக் கால்நடை அபிவிருத்திக் கழகம் அங்கீகரித்திருக்கும் ஷை திட்டத்தின்படி காங்கயம் ஓங்கோல் சிந்தி கள்ளிக்கரை மாடுகளில் 110 காளைகளும் காங்கயம் ஓங்கோல் வம்சங்களில் 35 இளங் கன்றுகளும் முரா எருமைக் கடாக்கள் 100-ம் பிக்கானிர் ஆட்டுக் கடாக்கள் 120-ம் வாங்குவதென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. அடுத்த மார்ச்சு மீ 31உ க்குள்ளாக 110 காளைகளும் 35 இளங் கன்றுகளும் 50 எருமைக் கடாக்களும் அரசாங்கம் விதிக்கிற நிபந்தனைகளின்படி அவற்றைப் பாதுகாத்து வர ஒப்புக்கொள்ளுகிற கால்நடை விருத்தி செய்து வரும் சமுசாரிகளிடம் ஒப்புவிக்கப்படும்.

இளங் கன்றுகளை வளர்ப்பவர்களுக்கு இரண்டு வருடத்திற்கு அல்லது அவை பொலிவதற்கு இலாயக்காகும் வரை வருடத்திற்கு 50 ரூபாவாக உதவித் தொகை கொடுக்கப்படும். 50 முரா எருமைக் கடாக் கன்றுகளை அரசாங்கப் பண்ணையில் வளர்த்து, எருமைக் கால்வழிகளை விருத்தி செய்வதற்காக 18 மாதங்களுக்கு மேல் அவற்றைச் சமுசாரிகளுக்கு விற்கப்படும்.

பிக்கானிர் ஆட்டுக் கடாக்கள் கோயம்புத்தூரிலும் பெல்லாரியிலு மிருக்கும் ஆடு வளர்ப்பவர்களுக்குக் கொடுக்கப்படும். இப்பொழுதும் அந்த இடங்களில் மயிரடர்ந்திருக்கும் ஆடுகள் விருத்தியாகி வருகின்றன.

Mail.

4. நைசாம் இராச்சியத்தில் வலுவந்தம் செய்யாமல், பொதுப் பிரசாரத்தின் மூலமாகவும் புத்தி சொல்லியும் குடியைக் குறைத்து வரப்படுகிறது. தாய்மொழிகளில் பல துண்டுப் பத்திரிகைகளும் செலவிடப் படுகின்றன; புகைப் படக் காட்சிகள் காட்டப்படுகின்றன; பிரசங்கங்கள் செய்யப்படுகின்றன; நாடகங்கள் நடிக்கப் படுகின்றன; கண் காட்சிகள் நடத்தப்படுகின்றன. இப்படியாக, குடியினால் வரும் கேட்டை விளக்கி, தானாகவே குடியை நிறுத்தும்படி செய்யப் படுகிறது.

ஐதராபாத் நகரத்தில் தவிர்ப்புரத்திலும் மள்ளிப்பள்ளியிலும் இருக்கும் குடியேற்ற வீடுகள் குடியாதிருப்பவர்களுக்கு மாதம் ஒன்

றுக்கு ஒரு ரூபா வாடகைக்கு விடப்பட்டிருக்கின்றன. குடிப்பவர்களுக்கு வாடகைக்கு விடுவதாக இருந்தாலும் அவர்கள் அதிக வாடகையே கொடுக்கவேண்டும். இந்த ஏற்பாட்டினாலும் குடி குறையவே செய்கிறது.

Hyderabad Information.

5. மீன்களை விருத்தி செய்வதற்காக ஒரு தனி இலாகா துவக்கப்பட்டிருக்கிறது. நம் (நைசாம்) இராச்சியத்திலுள்ள ஆறுகள் ஏரிகள் குளங்களிற் காணும் தின்னக்கூடிய மீன் வகைகளின் இருப்பை மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆறுகளில் விருத்தியாகி வருகிற மீன்களில் எவையெவை குளங்களிலும் விருத்தியாகக் கூடுமென்பதையும் கவனிக்கப்படும். அப்படி விருத்தியாகக்கூடிய மீன் குஞ்சுகளைக் குளங்களில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் படும். இராச்சியத்திற்கு வெளியே காணப்படும் வேறு வகை மீன்களும் இராச்சியத்திலுள்ள ஆறுகளிலும் ஏரிகளிலும் குளங்களிலும் கொண்டு வந்து விடப்படும். இதே மாதிரியாக, தின்னக்கூடிய நண்டுகளையும் விருத்தி செய்யப்படும். விற்பனைக்காக, சௌக்கியமாகவும் திட்டமாகவும் வெளியிடங்களுக்கு அவற்றை அனுப்பி வரவேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்படும். செம்படவர்களுடைய பொருளாதார நிலைமையைப்பற்றியும் அவர்களுக்காகக் கூட்டுறவு சங்கங்களும் அவர்களுடைய பிள்ளைகளுக்காக மீன் பள்ளிகளும் ஏற்படுத்துவதைப் பற்றியும் விசாரணை செய்யப்படும்.

H. E. H. Nizam's Dominions P. E. No. 1.

6. நிலவரி பாக்கிக்காக ஏலமானதை இரத்துச் செய்து கொள்ள எவ்வளவு காலத்திற்குள்ளாக வியாச்சியம் தாக்கல் செய்ய வேண்டும்? சென்னை உயர் நீதிமன்றம், தலைமை நீதிபதி, செண்டில், சோமையா நீதிபதிகள் முன்பாக 17-9-1941.

சென்னை நிலவரிச் சட்டம் 59வது விதியின் படி பதிலிக் கலக்டர் (Deputy Collector) ஏலத்தை உறுதி செய்த தெய்தியிலிருந்து 6 மாதத்திற்குள்ளாகவா? புனராலோசனையில் கலக்டர் தலையிடமுடியாதென்று உத்தரவிட்ட தெய்தியிலிருந்து 6 மாதத்திற்குள்ளாகவா?

ஒரு நிலம் 1932ம் ஆண்டு ஜூலை மீ 18ம்வ நிலவரி பாக்கிக்காக ஏலமாகி அந்த ஏலம் அதே யாண்டு செப்டம்பர் மீ 28ம் வ உறுதியும் செய்யப்பட்டது. வாதிக்கு நவம்பர் மீ 15ம் உ யன்று தான் ஏலம் தெரியவந்தது. அதன் மேல் கலக்டருக்குப் புனராலோசனை செய்யும் படி அதே மீ 18ம் உ யன்று மனுச் செய்து கொண்டார். கலக்டர் தான் தலையிடமுடியாதென்று அடுத்த ஆண்டு ஜூன் மீ 30 உ பைசல் செய்தார். அதன் மேல் ஏலம் மோசமென்பதாகச் ஜூலை மீ 18ம்உ யில் வியாச்சியம் செய்யப்பட்டது. குடிவாடா ஜில்லா முனிசீபு ஏலத்தில் மோசமில்லையென்றும் வியாச்சியம் காலாவதியாகி விட்டதென்றும் வியாச்சியத்தைத் தள்ளுபடிசெய்துவிட்டார். அப்பீலில் மசூலிப்பட்டினம் கீழ் நீதிபதி (Sub-Judge) ஏலத்தில் மோசம் நடந்திருக்கிறதென்றும் என்றாலும் ஏலம் உறுதியான 6 மாதத்திற்குள் வியாச்சியம் செய்து கொள்ளவில்லை யென்றும் வியாச்சியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார். அதன் மேல் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு இரண்டாவது அப்பீல் செய்ய நீதிபதி வெங்கடரமணராவ் மோசம் உண்மையென்று கண்டும் 30 சென்னை 3:7க்கு விரோதமாக தான் போகக் கூடியதில்லை யென்றும் அப்பீலைத் தள்ளுபடி செய்து விட்டார். அதன் மேலும் அப்பீல் செய்ய அனுமதிபெற்று அப்பீல் செய்ததில் தலைமை நீதிபதி மாக்கேட் நீதிபதிக்கு முன் வந்ததில் அவர்கள் அதை முழுபெஞ்சுக்கனுப்பி விட்டார்கள்.

முழுபெஞ்சில் 30 சென்னை 367 ஐந்து நீதிபதிகள் சேர்ந்து செய்த 43 சென்னை 185 தீர்ப்புக்கும் 23 கல்கத்தா 775 பிரிவி கவுன்சில் தீர்ப்புக்கும் விரோதமாக இருக்கிற தென்றும் கலக்டர் தலையிடமுடியா தென்று பைசல் செய்ததிலிருந்து 6 மாதத்திற்குள் வியாச்சியம் செய்திருக்கிறது சரியென்றும் அப்பீலை வாதிக்கனுகூலமாக முடிவு செய்திருக்கின்றனர்.

Hindu.

7. விபசாயிகளின் விளைபொருள் முதல் விற்பனை வரி செல்லுமா? சென்னை உயர் நீதி மன்றத் தீர்ப்பு. முதல் நீதிபதியும் நீதிபதி சந்திர சேகரய்யரும்.

இவ்வழக்கில் பிரதிவாதிகளா யிருப்பவர்கள் சென்னை விற்பனைவரிச் சட்டம் செல்லாதென்று தீர்ப்புச் செய்ய வேண்டுமென்றும், தாங்கள் விற்பனை செய்து வரும் மணிலாக் கொட்டை எண்ணெய் பிண்ணாக்கு இவற்றின் மீது வரி விதிக்கக் கூடாதென மாகாண சர்க்காரைத் தடை செய்ய வேண்டுமென்றும், தாங்கள் அதுவரை செலுத்தி யிருக்கும் ரூ. 163—11—0 யும் திருப்பிக் கொடுக்குமாறு சர்க்காருக்கு உத்தரவிட வேண்டுமென்றும் விசயநகரம் சில்லா முன்சீப் கோர்ட்டில் வழக்குத் தொடுத்தார்கள்.

விளைபொருள்களின் முதல் விற்பனை மீது விதிக்கப் படும் வரி உள்நாட்டுச் சரக்கு வரியாகுமென்றும், ஆகவே அவ்விற்பனை சம்பந்தப் பட்ட வரை சட்டமியற்ற மாகாணச் சட்ட சபைக்கு அதிகார மில்லையென்றும் சில்லா முன்சீப் தீர்ப்புக் கூறினர்...............

அதன்மேல் அரசாங்கம் சில்லா மன்றத்துக்கு அப்பீல் செய்ய அவ்வப்பீலை அட்வகேட் செனரலின் கோரிக்கையின் பேரில் சென்னைக்கு மாற்றப் பட்டது.

சென்னைத் தீர்ப்பு; பொருளை உற்பத்தி செய்பவர், அதனை விற்கும்பொழுது விதிக்கப்படும் வரி உள் நாட்டுச் சரக்கு வரியாகுமா என்பதே நாங்கள் கவனிக்கவேண்டிய காரியம். மேற்படி வரி உற்பத்தி செய்யப்படும் பொருள் மீது விழுவதாலும், உற்பத்தி செய்பவரின் கையைவிட்டுப் பொருள் கிளம்பு முன்னரே அவ்வரி விதிக்கப்படுவதாலும் அஃது உள் நாட்டுச் சரக்கு வரியேயாகும். அப்படி வரி விதிப்பது மத்திய சர்க்காரின் அதிகாரத்தை மேற்கொள்ளுவதாகு மென்றும், ஆகவே அவ்விதம் வரி விதிக்க மாகாணச் சட்டசபைக்கு அதிகாரம் இல்லையென்றும் நாங்கள் தீர்மானிக்கிறோம். சென்னை விற்பனை வரிச்சட்டம் மொத்த வியாபாரத்தின் மீது விதிக்கப்படும் வரியேயானாலும் முதல் விற்பனை சம்பந்தப் பட்டவரை அது செல்லாது.

சுதேசமித்திரன்.

இ. கூட்டுறவு கல்வி சுகாதாரச் செய்திகள்

1. சென்னை கல்வி விதிகள் 17 ஏ. அனுபந்தம் 2வது தொகுதி தபசில் வகுப்பினர் தவிர்த்த மற்ற சாதியார்களில் திருநெல்வேலி மதுரை இராமநாதபுரம் தஞ்சாவூர் அகமுடையார்களும், மற்றும் கம்மாளரும் கைக்கோளரும் அரைச் சமபளக் கல்விச் சலுகைக்குரியவர்களாவார்கள்.

G. O. 1469 Eden. dd. 18—9—41.

2. நாட்டாண்மை நகராண்மைக் கழகங்களின் ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் குறைத்துச் சிலரை விலக்கும்பொழுது, கடைசியாக நியமிக்கப்பட்டவர்களை விலக்குவதினால் சில சமையம் குறைந்த தகுதியுடையவர்களை வைத்துக்கொள்ளுவதாகவும் உயர்ந்த தகுதியுடையவர்களை விலக்கவும் நேர்ந்துவிடுகிறது. அது சரியில்லை யாதலால், ஐம்பது வயதும் இருபதாண்டூழியமும் ஆகியும் உபகாரச் சம்பளம் அல்லது சம்பளச் செட்டு நிதிக்கு இலாயக்காகியும் கீழ்தர ஆரம்பப் போதனாமுறைப் பரிட்சையே தேறியவர்களாயுமிருக்கிறவர்களை முதலாவதாக விலக்கப்படும். என்பதாகக் கல்வி விதி திருத்தப்பட்டிருக்கிறது.

Mail.

3. பம்பாய் அரசாங்கம் முதியோர் கல்வித் திட்டத்தின் கீழ், கிராமப் புத்தக வாசகசாலைகளைப் பதிவு செய்துகொள்ளுவதற்கும் அவற்றிற்குப் பணம் உதவி வருவதற்கும் வேண்டிய விதிகள் செய்திருக்கிறது. கிராமப் பஞ்சாயத்துக்களும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களும் மற்றும் கிராமப் புத்தகசாலை நடத்திவர விரும்பும் கூட்டங்களும் மனிதர்களும் குறிப்பிட்ட

பாரத்தின் மூலம் அந்தந்தச் சில்லாக் கல்விப் பதவிப் பார்வையாளர்களிடம் (Deputy Educational Inspector) தங்கள் புத்தக சாலைகளைப் பதிவு செய்துகொள்ளவேண்டும். சாதாரணமாக, ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு புத்தகசாலை மட்டும் பதிவு செய்து கொள்ளப்படும். பெண்கள், பிள்ளைகள் அல்லது இருவருக்குமாக விசேட புத்தகசாலைகளும் அமைக்கப்படலாம்.

புத்தக சாலைகள் திறமை வாய்ந்தவர்களுடைய மேற்பார்வையி லிருக்கவேண்டும். எவரும் தட்டுத்தடை யின்றியும் இனமாகவும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடியதாகவும் இருக்க வேண்டும். ஒரு நாளைக்கொரு மணி நேரமாவது திறந்து வைக்கப்பட்டிருக்கவேண்டும். மற்றும் சில கணக்குகளும் பதிவு புத்தகங்களும் வைத்து வரவேண்டும்.

புத்தகசாலைச் செலவில் 40 சதமானம் செய்தித் தாள்களுக்கும் இடையிட்டே வரும் பத்திரிகைகளுக்கும் (Periodicals) 40 சதமானம் புத்தகங்களுக்கும் 20 சதமானம் பிற இனங்களுக்கும் செலவிடப்படலாம். இவற்றில் எதாமொரு இனத்தில் மிஞ்சுவதை பிரிதோரினத்துக்கும் உபயோகித்துக்கொள்ளலாம். புத்தக சாலைகளுக்கு, அவை முதல் வருடத்தில் புத்தகங்கள் பத்திரிகைகள் வாங்கும் செலவில் மூன்றிலிரண்டு பங்காயினும் 30 ரூபாவாயினும் இவற்றில் எது குறைவோ அது இனமாகத் தரப்படும். பெரிய கிராமங்களுக்கு 50 ரூபா அல்லது செலவில் மூன்றிலிரண்டு பங்கு இவற்றிலெது குறைவோ அதுவே தரப்படும்.

அரசாங்கத்தின் பண நிலைமை இடம் தருமென்றால் பதிவு செய்யப்பட்ட மூன்று வருடங்களுக்குப் பிறகு அப்படிப் பதிவு செய்யப்பட்டிருக்கும் சங்கங்களுக்கு பணம் உதவிவரப்படும்.

Bombay Information.

(நம் மாகாணத்திலும் புத்தக சாலைகளுக்கு உதவி செய்வதைப் பற்றிய செய்தியை செப்டெம்பர் இதழ் 278-ம் பக்கத்தில் குறித்திருக்கிறோம். சில வருடங்களில் கொடுத்தும் சில வருடங்களில் நிறுத்திக்கொள்ளுவதாலும் புத்தக வாசகசாலைகளில் நாம் நிரந்தரமான அபிவிருத்தியைக் காண முடியாது. சென்னை புத்தக சாலைச் சங்கம் 1931-ம் வருடம் தயார் செய்த சென்னை புத்தக சாலை சட்டம் போன்ற ஒரு சட்டம் அமுலிலிருக்கவேண்டும். 'பிடி பிடி சோற்றுக்கும் நமசிவாயா' என்றபடி புத்தகசாலை வரி யென்பதுங் கூடாது. தாலூகா போர்டுகள் எடுபட்டுப் போய்விட்டதால் அவற்றிற்கு அந்தச் சட்டத்திலும் இடம் வேண்டாம். தலதாபனப் புத்தக சாலைகளோடு மற்றும் உதவியை விரும்பும் பொதுப் (கட்சிச் சார்புமில்லாத) புத்தக சாலைகளையும் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவை புத்தகங்கள் பத்திரிகைகள் வாங்கும் மொத்தச் செலவில் பேர் பாதியேனும் அவற்றிற்கு அரசாங்கம் உதவி வரவேண்டும். ப—ர்.)

4. நம் மாகாணத்தில் அடுத்த நான்கு மாதங்களில் காவிரி தாம்பரபர்ணி தீரவாசங்களைச் சுற்றி வாந்திபேதி அதிகமாகக் கூடுமென்று ஊகிக்கப்படுகிறது. அந்தப் பிரதேசங்களிலுள்ள சுகாதார அதிகாரிகளும் தல தாபனங்களும் வேண்டிய முன்னெச்சரிக்கையான காரியங்களெல்லாம் செய்துகொள்ளவேண்டும்.

Press Communique No. 56.

5. கூட்டுறவு விதித் திருத்தங்களைப் பற்றிய யோசனைகள் ஆட்சேபனைகள் சொல்லுவதற்காக அக்டோபர் மீ 10உ வரை வாய்தாக் கொடுத்திருந்ததை நவம்பர் மீ 11உ வரை நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

Press Note No. 165.

ஊக்கம் சிறந்தால் உழவு சிறக்கும்; உணவு சிறந்தால் உடல்கள் சிறக்கும்;
உழவு சிறந்தால் உணவு சிறக்கும்; உடல்கள் சிறந்தால் உயிர்தரித் திடுமே!

ஓர் கிராமவாசி

12. அறிவுரைத் திரட்டு.

அ. விவசாய வியாபாரக் கைத்தொழிற் குறிப்புக்கள்.

நெல் முதலிய உணவுத் தானியங்களின் விளைவை அதிகப்படுத்துவ தெப்படி?

நம் மாகாணத்தில் நெல் சோளம் முதலிய தானிய வகைகளும் பயறு வகைகளும் 75 சதமான நிலங்களில் சாகுபடியாகி வருகின்றன. என்றாலும், வழக்கம்போல் சென்ற 1939-40 ம் ஆண்டிலும் பர்மா சியாம் இந்துச்சீனு நாடுகளிலிருந்து 9 இலட்சம் தன் (Ton) அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. சென்ற சில மாதங்களாகப் போதிய கப்பல்களில்லாத காரணமாக அந்நாடுகளிலிருந்து அரிசி ஒழுங்காக வருவதற்குமில்லை; போதியதாக வருவதற்குமில்லை. சமீபகாலமாக, சண்டையின் எல்லை நம் நாட்டிற்கும் நெருங்கிவந்திருக்கிறது. கீழ்நாடுகளில் சமாதானக் குறைவு நேரவும், பர்மா சியாம் முதலிய நாடுகளிலிருந்து அரிசியிறக்குமதியாவதும் பூராவாக நின்று விடும்.

ஆகையால், நாமொவ்வருவரும்—நில முதலாளிகளும் பாடுபடும் சமுசாரிகளும், முன்னெச்சரிக்கையாக நம்மால் கூடிய உச்ச அளவிற்கும்—அதிகப்படியாகவும் விருத்தியாகவும் சாகுபடி செய்து விளைவைப் பெருக்கித் தீர வேண்டும். இன்றைய பொருளாதாரப் போரில் வெடியும் வெடிமருந்தும் செய்தல் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியமாகும் அந்தந்த நாட்டிற்குள்ளாகவே அந்தந்த நாட்டிற்குப் போதிய உணவுப் பொருள்களைத் தயாரித்துக் கொள்ளுவதும். நெல் கேழ்வரகு சோளம் கம்பு தினை முதலிய உணவுப் பொருள்களின் விளைவை, புது நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வருவதாலும் வெளி நாடுகளிற் போய் விற்பனையாக வேண்டிய நிலக்கடலை புகையிலை முதலிய வியாபாரப் பொருள்களுக்குப் பதிலாக அவற்றைச் சாகுபடி செய்வதாலும் நிலக்கடலை முதலிய வியாபாரப் பயிர்களோடு சோளம் முதலிய உணவுப் பயிர்களையும் கலந்து சாகுபடி செய்வதாலும் அதிகப்படுத்தலாம். இந்தப் பயிர்கள் காணும் மேனியை அதுவும் தண்ணீர் பாய்ச்சும்பொழுது தீவிரமான முறைகளைக் கையாடியும் அதிகப் படுத்தலாம்.

நம் மாகாணத்தில் வானுவாரியாகவும் இலாபகரமாகவும் விளையக் கூடிய தரிசு நிலங்கள் அதிகமாக இல்லை. ஆற்றுப் பாசனம் குளத்துப் பாசனத்தின் கீழ் தண்ணீர் பாய்ச்சி விளைவிக்கக் கூடியதான நிலங்களையும் அதிகப் படுத்தக் கூடியதில்லை. இப்பொழுது தண்ணீர் பாய்ச்சி, கரும்பு புகையிலை நிலக்கடலை சாகுபடியாகும் பரப்பைக் குறைத்து, பொருத்தமான தானியப் பயிர்களை அவற்றில் சாகுபடி செய்யலாம். வானுவாரியாகச் சாகுபடியாகும் வியாபாரப் பயிர்களோடு அவற்றிற்கேற்ற தானியப் பயிர்களையும் கலந்து சாகுபடி செய்யலாம். அப்படி நிலங்களில் விளையும் உணவுத் தானியங்களின் மேனி குறைவாக இருந்த போதிலும் மொத்தத்தில் நமக்கு வேண்டிய தேவையின் குறைவைக் குறைத்து விடக்கூடும்.

தண்ணீர் பாய்ச்சிச் சாகுபடியாகும் உணவுப் பயிர்களின் விளைவை அதிகப்படுத்துவதற்காகத் தக்க உரமிட வேண்டும். நம் மாகாணத்தில், ஒரு கோடி ஏக்கரில் உணவுப் பொருள்கள் தண்ணீர் பாய்ந்து சாகுபடி யாகின்றன. இதில் 80 இலட்சம் ஏக்கர் நெல் சாகுபடியாகும். பாக்கி 20 இலட்சம் கேழ்வரகு சோளம் கம்பு தினை சாகுபடியாகின்றன. இவற்றில் தான் முக்கிய உணவுப் பொருள்கள் விளைகின்றன. ஆகையால், இவற்றை முறையாகவும் போதிய அளவிற்கு உரமிட்டும் தண்ணீர் பாய்ச்சி வந்தால், நமக்கு வேண்டிய உணவுத் தேவையின் குறைவை நாமெப்படிப் பூர்த்தி செய்துகொள்வ தென்ற கவலையும் கழிந்து விடும். ஏக்கருக்கு 2,500 முதல் 3,000 இராத்தல் முதற் போகம் விளையும் நன்செய் நிலங்களில் இரண்டு மூன்று வண்டிப் பாரம் குழை உர மிடுவதினுலும் நிலக்கடலை ஆமணக்கு அல்லது வேப்பம் பிண்ணாக்கு ஏகருக்கு 10 ரூபா சராசரி செலவுக்குள்ளாக 400 முதல் 500

இராத்தல்வரை உரமிடுவதினாலும் 4,000 முதல் 6,000 இராத்தல் வரை விளையும்படி செய்து கொள்ளலாம். இப்பொழுது 1,500 முதல் 2,000 இராத்தல் வரை விளையும் நிலங்களில், அதே யளவு உரமிட்டு, 20 முதல் 30 சதமானம் விளைவை அதிகப் படுத்திக்கொள்ளலாம். போதிய அளவு பச்சைக்குழை கிடைக்காது போனால், கிடைக்காத அளவிற்குத் தக்கதாக அந்தப் பிரதேசத்தில் சௌக்கியமாகக் கிடைக்கக் கூடிய பிண்ணாக்கும் போட்டுக் கொள்ளலாம். சண்டையின் காரணமாக, எண்ணெய் வித்துக்கள் ஏற்றுமதி யாவதற்கில்லாததால் பிண்ணாக்கின் விலையும் குறைந்திருக்கிறது. ஆகையால், முன்னளவிற்கு இரண்டு மடங்கு கூட அதே செலவிற்கு உரமிடலாம். செப்டெம்பர் முதல் சனவரி, சனவரி முதல் ஏப்பிரல் மாதங்களில் விளையும் நெற் பயிர்களுக் குரமிடுவதால் அப்படி உரமிடாத நிலங்களில் விளைவதைக் காட்டிலும் 30 முதல் 50 சதம் அதிக விளைவை நாம் பெறலாம். மொத்தத்தில் சாகுபடியாகும் நிலங்களில் சொற்ப பாகமே ஒழுங்காக உரமிடப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நில முதலாளியும் சமுசாரியும் ஒரு ஏக்கருக்கு 10 ரூபா வரை செலவழிக்கிறதென்று ஏற்பாடு செய்து கொண்டால், அவர்களுக்குள் பிரித்துக் கொள்ளக் கூடியதாக 20 ரூபா நெல் விளையவும் செய்யும். அவர்கள் செலவழித்த 10 ரூபாவுக்கும் முன்னினும் அதிகமாக 20 ரூபா நெல் விளைந்திடும். நில முதலாளிகள் தங்களுக்குத் தெரிந்த சமுசாரிகளுக்கு உரமிட வேண்டியதற் கவசியமான பணம் முன் பணமாகவும் கொடுத்து அறுவடைக் காலத்தில் வசூலித்துக் கொள்ளலாம். பாங்குகளும் சௌக்கியமான வட்டிக்குக் கடன் கொடுக்கின்றன. பிண்ணாக்கும் சௌக்கியமாகக் கிடைக்கிறது. விளைவின் விலையும் உயர்ந்துதானிருக்கிறது. இப்படி நில முதலாளியும் சமுசாரியும் செய்து, அதிக உணவுப் பொருள்கள் விளைவிப்பது நாட்டைக் காப்பாற்றுவது மட்டுமாகாது; தங்கள் நன்மையையும் தேடிக் கொண்டதாகும்.

விவசாய இலாகா விற்பனை செய்கிற அதிக மேனிதரும் விதைகளை வாங்கி விதைப்பதாலும் உரத்தின் பயன் பின்னும் அதிகமாகும். வானவாரிப் பிரதேசத்தில் சாகுபடி செய்வது போலல்லாமல் நாலங்குல முதல் ஆறங்குலத் திற்குள்ளாகத் தொளியில் நெல்லை நெருக்கி நடுவதால் விளைவும் அதிகமாகும். காரையையும் குறுவையையும் குழிக்கிரண்டு நாறாக நாலங்குல இடை வெளி விட்டும் சம்பாவிற்கு ஆறங்குல இடை வெளி விட்டும் நடவேண்டும். நெல் எவ்வளவிற்கு நெருங்கி வளருகிறதோ அவ்வளவிற் கதிகமாக அதன் விளைவு மிருக்கும். நெல்லின் மொத்த விளைவெல்லாம் ஒரே தூரில் கரண்கள் எவ்வளவு அதிகமாகக் கட்டுகிறதோ அவ்வளவிற்கு விளைவும் அதிகமாக இருக்கும். கலக்கமாக நடுவது பார்வைக்கு அழகாக இருந்தாலும் அறுத்தடித்து விளைவைக் காணும்பொழுது விளைவு குறைவாகவே போய்விடும். எதாமொரு பிரதேசத்தில் அப் பிரதேசத்தின் நிலைமைக்குத் தக்கதாகக் கலக்கமாக நடவேண்டிய திருந்தாலும் குழியொன்றுக்கு மூன்று நான்கு நாறுகளை யாவது நடவேண்டும்.

தங்கள் தங்கள் நிலத்திலேயே பாடுபடுவதாயிருந்தாலும் சரி, நிலமுதலாளி வேறு ஊரிலும் சமுசாரி நிலமுள்ள ஊரிலுமிருந்து பாடுபடுவதாயிருந்தாலும் சரி, ஒருவரோடொருவர் கலந்து விளைவை அதிகப் படுத்துவதற்கு மேலே விவரித்தும் கீழே சுருக்கியும் சொல்லியிருக்கிற முறைகளெந்தையுமோ ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளையோ சாத்தியமான வற்றையெல்லாம் அவசியம் கையாடவேண்டும்.

1. சாத்தியமான பொழுது வியாபாரப் பயிருக்குப் பதிலாகப் பூராவு மாகவோ அல்லது ஓரளவிற்குக் குறைந்தோ நெல் சோளம் முதலிய தானியப் பயிர்களைச் சாகுபடி செய்ய வேண்டும்.

2. அப்படிப் பூராவுமாக மாற்றிக்கொள்ளமுடியாத வானவாரி நிலங்களிலும் தோட்ட

நிலங்களிலும் வியாபாரப் பயிர்களோடு சோளம் முதலிய பயிர்களையேனும் கலந்து சாகுபடி செய்யவேண்டும்,

3. தண்ணீரிறைத்துச் சாகுபடி செய்கிற பயிர்களுக் கெல்லாம் ஏக்கருக்கு இவ்வளவென உரமிட வேண்டும்.

4. விபசாய இலாகா அந்தந்தப் பிரதேசத்திற்குச் சிபார்சு செய்யும் அதிக மேனி காணும் விதைகளையே விதைக்க வேண்டும்.

5. தொளி கலக்கி நெல் நடும் பொழுது, நாறுகளை நெருக்கி நடவேண்டும்.

The Director of Agriculture (Madras), Press Note.

1. நம் நாட்டில் மட்டுமல்ல, உலகம் எங்குமே குடிசைத் தொழிலின் அபிவிருத்தியெல்லாம், செய்பொருள்களை இலாபகரமாக விற்பதற்குள்ள சௌகரியங்களைப் பொறுத்ததாகவே இருக்கிறது. சப்பானிலுள்ள தொழிற் சாலைகளில் 86 சதமானம் குடிசைத் தொழிற் சாலைகளாகவே யிருக்கின்றன. மொத்தக் கூலியாட்களில் 26 சதமானம் அவற்றில் வேலை செய்கின்றனர். சப்பானில் இலாபகரமாகவும் மிருந்து விருத்தியாகியும் வருகிற குடிசைத் தொழில்கள் பிற நாடுகளிலும் வெற்றிபெறக் கூடுமென்பதில் சந்தேகமில்லை. வங்காளக் கைத்தொழில் விசாரணைக் கழகம் கிராமத் தொழிலாளிகள் செய்யும் செய் பொருள்களை விற்பனை செய்வதற்கான சௌகரியங்களைச் செய்தாக வேண்டியது அவசியமென ஓர் இடையறிக்கை (Interim Report) சமர்ப்பித் திருக்கிறது.

Industry.

2. தென்னிந்தியாவில் 400 தோல் பதனிடும் சாலைகளிருக்கின்றன. வருடத்திற்கு 7 கோடி ரூபாவுக்கு மேற் பெறுமான தோல்கள் பதனிட்டும் பதனிடாமலும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. உள்நாட்டு வியாபாரமும் இதற்கு மூன்று மடங்கிருக்கலாம். இந்தத் தொழிலில் பதினாயிரம் குடும்பங்களுக்குக் குறையாமல் ஈடுபட்டிருக்கின்றன. முந்திய சண்டையில் தோல் வியாபாரம் வெகு இலாபகரமாக யிருந்தது. இப்பொழுது விலை கட்டுப்படுத்தப் படுவதாலும், அனேக வெளி நாடுகளுக்குச் சரக்கு அனுப்பவே முடியாது போவதாலும், அனுப்பக்கூடிய நாடுகளுக்கும் போதிய கப்பல் சௌகரியம் இல்லாததாலும் இந்தச் சண்டையில் தோல் வியாபாரம் அவ்வளவு இலாபகரமாக இல்லை. அரசாங்க ஆதரவுடன் தென்னிந்தியாவில் சோடுகளும் குதிரைச் சேணங்களும் செய்யப்படுமென்றால், நல்ல மிச்சம் ஏற்படக்கூடும். சண்டைக்குச் சோடுகளும் மற்றும் சில தோற் சாமான்களும் செய்து தரக்கூடும். இந்தத் தொழிலைச் சென்னையில் துவக்குவதற்கு மிகுந்த சௌகரியமுண்டு. அதனைக் கவனிப்பார்களாக.

Industry.

3. அமெரிக்காவிற்கு (U. S. A.) வெளி நாடுகளிலிருந்து போகும் வெள்ளாட்டுத் தோலில் மூன்றிலொரு பாகத்திற்குமேல், நம் நாட்டிலிருந்து போகிறது. அது மூன்று தரமாகப் பிரிக்கப்படுகிறது. இங்கிருந்தே நயம் சரக்காகத் தரம்பிரித்து அனுப்பப்படுமென்றால், இந்த வியாபாரம் தொடர்ந்தும் விருத்தியாகவும் நடந்துவரக்கூடும். வெள்ளாட்டுத்தோல் அதிகமாக விளையக்கூடியதாதலாலும், மயிர்க்கண்கள் அதிகமாக இருப்பதாலும், அதன் நிறம் பிடித்திருப்பதாலும், அது சோடுகளுக்கு மேலடிக்கும் உட்புறத்திற்கும் முக்கியமாக உதவுகிறது.

வர்த்தக ஊழியன்.

ஆ. இலக்கிய இலக்கண அருங்கலைக் கல்வியாராய்ச்சிக் குறிப்புக்கள்.

1. கடல்கோள் முதலிய இயற்கை நிகழ்ச்சிகளால் நாடுகள் குறைந்து போவதை யாருந் தடுப்பதற்கில்லை. ஆனால், மக்கள், தம் முன்னோரிடத்தும், தம் நாட்டினிடத்தும், தம் மொழியினிடத்தும் அன்பு குன்றி ஊக்கங் கெட்டுப் பிறமொழி ஆட்சிக்கு இடங் கொ

டுத்து, நாடிழந்து நலமிழந்து போகுஞ் செயற்கைத் தடைகளையேனும் நீக்கிக் கொள்ள வேண்டுமன்றோ? உலகத்தில் அவரவருந் தத்தம் நாட்டளவிலிருந்து நலம் பெறுவதன்றோ, எல்லாரும் நலமாக இருப்பதற்கு வழியாகும். உலகத்தில் ஒரு சாரார் தேவைக்கு மேல் வள முடையவராயிருக்க, மற்றொரு சாரார் நாடும் நலமுமிழந்து மிக்க வறியராய் உழல்வது நன்றாமோ?

பழந் தமிழர் நாகரிகம்.

2. தமிழ் வேறு, ஆரியம் வேறு என்ற பிரிவுணர்ச்சிகளை ஏற்படுத்துவதாகத் தமிழ்ப் பகுதியாரைச் சில அரசியற் கொள்கையினர் குறை கூறுகின்றனர். இத்தகைய பிரிவுணர்ச்சி ஏற்படுவதற்கு ஆரியப்புலவரும் ஆரியப் பகுதியினருமே அடிப்படை என்பதை அவர்கள் தான் மறந்து விடுகிறார்களென்றில்லை; நடுவு நிலைமையாக விருந்து காண்போமென்று கூறுவாரும் உணராதிருக்கின்றனர். இவ்வுலகத்தில், ஒரு மொழியேனும் பிறமொழி கலப் பின்றி வாழ இயலாதென்பதையும், பிறமொழி கலப்பதனால் குறைபாடுடையது ஆகமாட்டாதென்பதையும் மொழிநூல் உணர்ந்தார் யாவரும் நன்குணர்வர். அவ்வாறிருப்பவும், ஆரியப் பகுதியினர் சிலர் தமிழ்மொழியிலுள்ள சொற்கள் சிலவற்றை எடுத்துக்கொண்டு, இவை வடமொழியினின்றே தமிழில் வழங்கியது எனக் கூறுவதும், அவ்வாறு கூறும்போது, வடமொழியினின்று தமிழ்மொழி சில சொற்களைப் பெற்று வழங்குகின்றமையால், அம்மொழியினும் தாழ்வுடையது என்பதும், அவ்வாறே தமிழ் மக்களும், தமிழ்க்கலையும், தமிழ்ச் சமய வளர்ச்சி முதலிய பலவும் வடநாட்டுமொழி, கலை முதலிய வற்றிற்குக் கீழ்ப்பட்டன என்பதுமான குறிப்புத் தோன்றப் பேசுவதனாலேயே, தமிழ் மக்கள் உள்ளம் புண் பட்டு, இவ்வாறு பிரிவுணர்ச்சி ஏற்பட்டதாகும். உலகத்துத் தோன்றும் எவற்றையும் தங்களுடையனவாகவோ, தங்கள் கலையின் விளைவாகவோ, கொண்டு பேசுவதோடு, பிறமொழி சமயம் கலை கொள்கை முதலிய வற்றை இழித்துக் கூறுவதே ஒரு சாரார் தொழிலாக இருந்துவருவது, நல்ல நடு நிலைமுறையில் வெறுக்கத்தக்கதே யாகும்.

நாட்டு மக்கள் குலமுறைத் தொடர்பினும், நடையுடை முறைகளினும், சமயச் சடங்குகளினும் ஆரியரையே பின்பற்றத் தொடங்கியது போல், மொழி வழக்கினும் அவர் பேசும் வடமொழிச் சொற்களையே கலந்து பேசுதலைத் தமக்கு உயர்வாக மதித்தனர். எவ்வளவுக்கெவ்வளவு வடமொழிக் கலப்பு மிகுதியாகின்றதோ, அவ்வளவுக்கும் உயர்வே யெனக் கருதி, அத்தகைய மொழியமைப்பையே நாளும் போற்றி வளர்க்கத் தலைப்பட்டனர். அதனால் வடமொழிச் சொற்களும், நடையமைப்பும் பெருகவே, தமிழ்ச் சொற்களும் அவற்றின் அமைதியும் அருகி, தமிழொடு தொடர் பற்றது. மலையாளம் என்னும் நிலை அணுகுகின்றது. நான் அந்நாட்டில் அலுவல் பார்ப்பதால், அந் நாட்டுச் சிறார், மக்களொடு பேசுமளவுக்கு மலையாள மொழியிற் பயிற்சி பெற்றேன். பெரும்பாலும் நம் தமிழ்ச் சொற்களைக் கொண்டு பேசுதலே எனக்கமைந்த பயிற்சி. ஆனால், நான் பேசுகின்ற பேச்சு அந் நாட்டுப் பொதுமக்களுக்கு எளிதில் விளங்குகின்றது. மலையாளங் கற்றுத் தேர்ந்தோர் பேசும் பேச்சு அவர்களுக்கு நன்கு விளங்குவதில்லை. கற்றோரெனப் படுவோர் வடமொழியினை மிகுத்துப் பேசுவதே அவர் பேச்சு விளங்காமைக்கும், தமிழ்ச் சொற்களைப் புகுத்துவதே என் பேச்சு விளங்குதற்கும் உரிய காரணங்களாம். இவ்வாறு, தமிழ் மொழி மலையாளமென வேறு மொழியாய்ப் பிரிந்து, தொடர்பற்றுப் போன வரலாற்றையறிந்தே, தமிழ் மக்கள் இனிப் புது வகையின் நாட்டிடைத் தோன்றும் வேறுபாடுகளையும் அறவே ஒழித்து, தமிழுணர்ச்சி தலை சிறந்தோங்கியுள்ள இவ்வருமையான காலத்திலேயே தமிழ் வளர்க்கும் நன் முயற்சியை மேற் கொள்வார்களாக!

கோச்சி திவான் சண்முகஞ் செட்டியார்.

இ. சிறந்த வாசகங்கள் செய்யுள்கள் அறவுரைகள் பழமொழிகள்.

I. சிறப்புற்ற பண்டைத் தமிழர்களின் வாழ்க்கையையும் இன்றைத் தமிழர்களின் போக்கையும் நோக்குழி நோக்குழி ஆறுத் துயர் விளைகின்றது. ஒரு வீரத்தாய், தன் மகன் பொருகளத்தில் மாறுபட்டான் எனக் கேட்டவுடன், அவனுக்குப் பாலூட்டிய மார்பை அறுத்தெறிவேன் என்றாள்; மற்றொரு தாய், தன் தந்தையும், கொழுநனும் போரிலே மரிக்கத் தன்னொரு மகனுக்கும் செருக்களத்தையே சுட்டிக் காட்டினாள்; மற்றொரு தாய், தன் மகன் போரிடை மரிக்கப் பெருமிதம் கொண்டாள். இத்தகு வீரஞ் செறிந்த தமிழகம்; "முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும் இரவாமலீந்த இறைவராண்ட தமிழகம்; யான் இச்செருவில் தோற்பேனாயின், 'பொருந்திய என்னிழல் வாழ்நர் சென்னிழல் காணாது, கொடியனெம் மிறையெனக் கண்ணீர் பரப்பிக், குடிபழி தூற்றுங் கோலேனாக" என்று பழியஞ்சின மன்னர்களையும், "யானோவரசன்? யானே கள்வன்; மன்பதை காக்கும் தென்புலங்காவல் என் முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்" என்றுரைத்து அரியணையிலேயே உயிர் நீத்த நீதியாளர்களையும் பெற்றிருந்த தமிழகம், கீர்த்தியைப் பெற்று மீண்டும் வயனுற வோங்கி வளங்குவதாக. ஆகையினால், தெவிட்டாத செந்தமிழ்த் தேனை யாவரும் மாந்தி மாண்புறவும், தமிழ்மொழி வளர்ச்சியுறவும் தமிழகம் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றமடையவும், நற்றமிழ் நாட்டு வீர இளைஞர்கள் சீரிய தொண்டு புரிய முன் வருவோமாக. தமிழ் மலை முகட்டில் தண்கதிர் விரிக்கும் தனிமணியாய் இலங்கும் ஒல்காப்பெரும் புகழ்த் தொல் காப்பியத்தைக் காண்மின்கள்! மக்கள் வாழ்வை வளமுறுத்தும் நல்லாறாய்த் தென்றமிழ் வெற்பினின்றும் விழுந்தோடும் திருக்குறள் மணியாற்றை நோக்குங்கள்.

"எண்ணிய வெண்ணியாங் கெய்துவ
வெண்ணியார் திண்ணிய ராகப் பெறின்."

வ. இரா. நாராயணசாமி.
Annamalai University Miscellany.

சிரிப்பில் இன்பம்.

[Smile, Smile, Smile!]

ராகம்: இன்: காபி — தாளம்: ஆதி

II. சிரிப்போம் சிரிப்போம் சிரிப்போமே
சிரிப்பினில் தொல்லையை மறப்போமே (சிரிப்)

பலவகை வேற்றுமை மறப்போமே
ஆபத்தும் துன்பத்தும் சிரிப்போமே (சிரிப்)

வாழ்விலும் தாழ்விலும் சிரிப்போமே
வெற்றியில் தோல்வியில் சிரிப்போமே (சிரிப்)

தண்டனை விதிப்பினும் சிரிப்போமே
தாங்கொணாப் பணிவிலும் சிரிப்போமே (சிரிப்)

பிணியும் அச்சமும் மடமையும் அகலத்
தினம் தினம் நாமே சிரிப்போமே (சிரிப்)

விரதச்சாரி விதிக்கோவை,

III. 1. செய்வன திருந்தச் செய்
2. செயமுள்ள மட்டும் பயமில்லை
3. சிறுகக் கட்டி பெருக வாழ்
4. செட்டியாருக்கோரு காலம் சேவகனுக்கோரு காலம்
5. சிற்றெறும்பைச் சிற்றெறும்பும், கட்டெறும்பைக் கட்டெறும்பும் தேடும்
6. உழ தலர்ந்தது பழுதாகாது
7. பசு உரத்திலும் பழம் புழுதி நல்லது
8. சித்திரை மாதத்துப் புழுதி பத்தரை மாத்துத் தங்கம்
9. புல்லற உழுதால் நெல்லற விளையும்
10. நஞ்சைக்கு ஏழுழவு புஞ்சைக்கு நாலுழவு
11. முன்னேர் மாட்டை முகத்தில் அடியாதே

IV. 1. அரசன் தன் நலத்தின் பொருட்டும், தன் நாட்டைக் காத்தற் பொருட்டும் மூன்று யாண்டுவரை செலவிடுதற்குப் போதிய அளவு தானியங்களை உரிய காலங்களிற் சேர்த்துத் தொகுத்து வைத்தல் வேண்டும்; செல்வ மிக்கார் அம் மூன்று யாண்டினும் மிக்க காலத்திற்கு வேண்டிய அளவு தானியங்களைச் சேர்த்து வைத்தலும் நன்றென்ப.

2. எந்நாட்டில் அரசன் விவேகமற்றவனாகவும், அரசவைக்கண்ணுள்ளார் ஒரு தலைச் சார்புள்ள வராகவும், புலவர்கள் நல்லொழுக்க மில்லாதவர்களாகவும், சான்று கூறுவார் பொய்யராகவும் உள்ளாரோ; தீயோர்க்கும், பெண்களுக்கும் (? ப-ர்.) இழிந்தோர்க்கும் செல்வாக்குண்டோ; அந் நாட்டில் ஒருவன் பொருள் மானம் இருப்பு வாழ்க்கை ஆகிய இவற்றுள் ஒன்றனையும் விரும்பலாகாது.

சுக்கிர நீதி.

(பண்டித மணி மொழிபெயர்ப்பு)

நமது இந்தியா இதுவரையும் நெல் விளையும் நாடுகளில் உலகத்திலேயே முதலாவது ஸ்தானத்தை வகித்திருந்தது. இப்போது இது இரண்டாவது ஸ்தானத்தை வகித்திருக்கிறது. இனி எத்தனுவது ஸ்தானத்தை வகிக்கப் போகிறதோ! ஆதலால் இந்தியா முன்னேறுவதும் பின்னேறுவதும் "உழவர்கள் கையிலிருக்கிறது" என்பது உள்ளங்கை நெல்லிக்கனியன்றோ?

ஓர் கிராமவாசி.